
# பனங்காமம் கயிலைநாதர் சிவாலயம்

## (பாணன்கமம் பஞ்ச லிங்கேஸ்வரர்)



**சிவகாமி சமேத கயிலைநாதர்**
**சிவாலய மகா கும்பாபிசேக**
**சிறப்பு மலர் – 2014**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகாமி அம்பிகா சமேத
# கயிலைநாதர் சிவாலயம்
# பனங்காமம்

## (பாணன்கமம் பஞ்ச லிங்கேஸ்வரர்)

அருட்கவியரசு பண்டிட்.
ஆச்சார்ய விஷ்வப் பிரம்மம்
வை.இ.எஸ். காந்தன் குருக்கள்
ஸ்ரீ காவிபுரம், பெரியபோரதீவு.




**சிவகாமி அம்பிகா சமேத கயிலைநாதர்**

**சிவாலய மகா கும்பாபிசேக**

**சிறப்பு மலர் - 2014**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




| | | |
|---|---|---|
| தலைப்பு | :- | சிவகாமி அம்பிகா சமேத கைலைநாதர் சிவாலய கும்பாபிஷேக சிறப்பு மலர் |
| இதழாசிரியர் | :- | திரு. கணபதிப்பிள்ளை விஜயகுமார் |
| வெளியீடு | :- | கைலைநாதர் சிவாலய ஆலய பரிபாலன சபை பனங்காமம் |
| காலம் | :- | 04.05.2014 |
| பிரதிகள் | :- | 250 |
| அளவு | :- | B5 |
| பக்கங்கள் | :- | 58 |
| அச்சுப்பதிப்பு | :- | சுபாஸ் அச்சகம்<br>புகையிரத நிலையவீதி,<br>வவுனியா |


## சமர்ப்பணம்

அண்டசராசரங்களையும் தன் அருட்பார்வையால் ஆட்சிசெய்துகொண்டு பனங்காமம் பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கைலைநாதருக்கு இம் மலரை சமர்ப்பிக்கின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

## இயல் 01 - ஆசிச்செய்திகள்


01. சிவஸ்ரீ செ. விமலராஜ குருக்கள் (ஆலய குருக்கள்)
02. சிவஸ்ரீ இராம ஸ்ரீரங்கக்குருக்கள் (பிரதம குருக்கள்)
03. திரு. கு.நகுலேஸ்வரக்குருக்கள்
04. திரு. து.ஷ. இரத்தினசபாபதிக்குருக்கள்
05. திரு. ஜெ. கைலை வாமதேவக்குருக்கள்
06. திரு. க.வீரமணி ஐயா
07. அன்னையின் அடியாள் ஆ. தியாகராசா
08. திரு. மா. வன்னியசிங்க மாப்பாணர்
09. திரு. பரமநாதன் யோகநாதன்
10. திரு. நா. சிறீஸ் கந்தராசா
11. திரு. கி. ஜெகதீசன்
12. திரு. சி. நடராசா
13. திரு ந. சிவசக்தி ஆனந்தன் (பாராளுமன்ற உறுப்பினர்)
14. வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் (வடமாகாண சுகாதார அமைச்சர்)
15. திரு. நா.வேதநாயகன் (மாவட்டச் செயலாளர்)
16. திரு. சிவகுரு நாதர் திருவாகரன் (வடமாகாண செயலாளர்)
17. திரு. T. பிருந்தாகரன் (பிரதேச செயலாளர் - பாண்டியங்குளம்)
18. திரு. அம்புலவாணர் தனிநாயகம் (பிரதேச சபைத் தலைவர்)
19. திரு. ம. யோகேசன் (கிராம சேவகர்)
20. திரு. க. சண்முகநாதன் (தலைவர்)
21. திரு. செல்லையா சுப்பிரமணியம் (காப்பாளர்)
22. திரு. செல்லையா வரதராசா (முன்னாள் தலைவர்)
23. திரு. இ. பூரணசற்குணலிங்கம் (செயலாளர்)
24. திரு. பரராசசிங்கம் துரைசிங்கம் (பொருளாளர்)
25. திரு. கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணானந்தா
26. திரு. வே. கனகசபை


## இயல் 02 - ஆலய வரலாறுகள்


27. பனங்காமமும் பஞ்சலிங்கேஸ்வர ஆலயமும்
28. பாதுகாக்கப்பட வேண்டிய பாணன் கமமும், பஞ்சலிங்கேஸ்வரர் ஆலயமும்


## இயல் 03


29. கும்பாபிஷேக குருமார் விபரம்
30. மண்டலாபிசேக உபயகாரர்கள்
31. மலராசிரியரின் இதயத்தில் இருந்து....
32. திருவூஞ்சற் பா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழத்
துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே
அப்பமுப்பழம் அமுது செய்தருளிய
தொப்பை அப்பனைத் தொழவினையறுமே.

## தேவாரம்

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலம் நீ சுற்றமும் ஓர் ஊரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வம் நீ

அருட்கவியரசு
கண்மணிதாசன்

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தின்னை நைவிப்பா னித்தருவே
ஐயா நீ யுலாப் போந்த அன்று முத லின்று வரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலுஞ்
செய்யாயோ அருள் கொடைய் திரலோக்கிய சுந்தரனே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமேயிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## பெரியபுரணம்

இறவாத இன்பவன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே(ல்) உன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ யாடும்போதுன்னடியின் கீழிருக்கவென்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பனங்காமம் சிவகாமி அம்பிகை சமேதகைலைநாத பஞ்சலிங்கேஸ்வரர் தேவஸ்தானம். கும்பாபிஷேக சர்வபோதகாசாரியார் ஆலயபிரதம குருவின் ஆசிச்செய்தி.

உலகில் நாம் உய்வதற்காகப் பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்துள்ள. இறைவனை ஆலயத்தில் எழுந்தருளச் செய்து வழிபடுதலே கும்பாபிஷேகம் எனப்படும். இலங்காபுரியில் வடபால் சைவமும் தமிழும் தளைத்தோங்கும் முல்லைத்தீவு மாவட்டத்தின் நட்டாங்கண்டல் பனங்காமம் என்னும் புண்ணிய ஷேஸ்த்திரத்திலே கோயில் கொண்டு எழுந்தருளி அடியார்கள் வேண்டும் அருளை அருள்பாலித்து வருகின்ற சிவகாமி அம்பிகை சமேத கைலை நாதப் பெருமானுக்கு நிகழும் மங்களகரமான ஜயவருஷம் சித்திரைத்திங்கள் 21ம் நாள் மகாகும்பாபிஷேகம் நடைபெற மிகவும் ஒரு நற்பணியை ஆற்றியுள்ளேன். என்ற மன மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. இந்த ஆலயம் பல நூற்றாண்டு காலம் பழமைவாய்ந்த ஆலயமாகும். கைலை மன்னன் வழிபட்ட தலமாகவும் கருதப்படுகிறது. இந்த ஆலயத்திலே ஒரே நேரத்தில் ஐந்து குருமார்கள் ஒன்றாக கூடி பஞ்சலிங்கேஸ்வரருக்கு பூஜை செய்து வந்ததாகவும் வரலாறுகள் கூறுகின்றன. எனவே அப்படிப்பட்ட ஒரு ஆலயத்தில் நித்திய நைமித்திய கடமைகளைச் செய்கின்ற ஒரு பெரும் பாக்கியத்தை எனக்கு இறைவன் தந்தருளியிருக்கின்றான். மிகவும் உள்ளம் மகிழ்வடைகின்றது. இந்த அருட்கடாட்ஷமானது என் வாழ்வில் கிடைத்தற்கரிய ஒரு அருளாகும். நான் இந்த ஆலயத்தில் பூஜை செய்து வருகின்ற காலப்பகுதிக்குள் கைலை நாதருடைய நாக பாம்பையும் நேரடியாக பார்க்கின்ற ஒரு அருளும் எனக்கு கிடைத்தது இதன் பின்னர்தான் மிக விரைவாக ஆலயம் புணர்நிர்மானம் செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. எனவே இந்த நிகழ்வானது. அழியா நினைவாக என்றும் எங்கள் கண் முன் அருட்கடாட்ஷமாக இருக்கும் எனவே இந்த ஆலயத்தை புனருத்தாரணம் செய்த ஆலய பரிபாலன சபையினருக்கும் கைலை நாத அடியவர்களுக்கெல்லாம் கைலைநாதப்பெருமானுடைய பரிபூரணமான அருள் கிடைக்க வேண்டும் என்றும் பாதாரவிந்தங்களைப் பணிந்து எனது நல்லாசிகளும் உரித்தாக்கட்டும்.

சிவாய நம என்று சிந்திப்போர்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை.
ஓம் நமசிவாய
சுபமஸ்து

சர்வ போதகாசிரியர் கிரியா கலாமணி
சிவஸ்ரீ செ. விமலராஜ குருக்கள்
(ஆலய பிரதம குரு)
வவுனிக்குளம்
சிவபுரம் சிவாலயம், பாண்டியன்குளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவஸ்ரீ இராம ஸ்ரீரங்கக் குருக்கள்

வினுஜா சோதிட நிலையம்

Siva Sri Rama Sriranga Kurukkal

VINUJA SOTHIDA NILAIJAM

MADATHTHADY ROAD, KODIKAMAM | மடத்தடி வீதி, கொடிகாமம். | தற்காலிக முகவரி: ஐயனார் வீதி, சரசாலை வடக்கு, சாவகச்சேரி.

Date......................

# ஆசியுரை

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது முதுமொழியாகும். கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தில் முன் தோன்றிய மூத்த குடி தமிழ்க் குடி இதற்கு இணங்க நம் முன்னோர்கள் தாம் எங்கிருந்தார்களோ அங்கெல்லாம் ஆலயங்களை அமைத்து இறை வழிபாடு செய்து வந்தனர். அவ்வாறே இவ்வாலயமும் முன்னோரால் 1952ம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்ததாக வரலாறுகள் கூறுகின்றன.

மனங்காமம் பதியில் பலவகை ஔடதவகையைச் சார்ந்த பெரு விருட்ஷங்கள் நிறைந்த சோலை சூழ்ந்த நிலப்பரப்பில் கிழக்கு நோக்கி பஞ்சலிங்க மூர்த்தங்களாக வீற்றிருந்து அவ்வூர் பக்தர்களுக்கு அருள் வீசிக்கொண்டிருக்கும் சிவகாமி அம்பாள் சமேத கைலைநாத மூர்த்திக்கு சித்திரை மாதம் 21ம் நாள் (04.05.2014) ஞாயிற்றுக் கிழமை திருவாதிரைப் பெருநாளில் காலை 8.43 முதல் 10.43 வரையான மிதுன லக்கின சுப முகூர்த்தத்தில் மகாகும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது என்பதையும் ஏனைய குருமார்களாகிய செல்வன் விமல்ராஜ் குருக்கள் இவர்களுடன் இணைந்து நான் பிரதானமாக வீற்றிருந்து இந்த கும்பாபிஷேகம் முழுமை பெற்றதை நினைக்கும் போது எனது உள்ளம் கனிந்து அக்கனி பக்தர்களாகிய உங்கள் அனைவருக்கும் அரும் சுவையாக கிடைக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல சிவகாமி அம்பாள் சமேத கைலைநாதர் சுவாமியை வேண்டி எனது ஆசியை வழங்கி நிற்கின்றேன்.

சுபமஸ்த்து

சர்வ ஜனகா சுகினோ பவந்து

சிவஸ்ரீ இராம ஸ்ரீரங்கக்குருக்கள்

கொடிகாமம் நாகலிங்கேஸ்வரி அம்பாள்

ஸ்தாபகரும் கொடிகாமம் ஸ்ரீ காளிகாதேவி

தேவஸ்தான பிரதம குருவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
அம்பிகை துணை
Lead is God

கீரிமலை ஸ்ரீநகுலாம்பிகா சமேத ஸ்ரீநகுலேஸ்வரசுவாமி கோவில்

**KEERIMALAI SRI NAGULAMBIGA SAMETHA SRI NAGULESWARA SWAMY TEMPLE**


*Rajarajasri K. Naguleswara Kurukkal J.P.*
Governing Authority & Chief Priest,
Naguleswaram, Keerimalai.
Kankesanthurai.
Phone:- 0217900470 Sri Lanka



ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்
நகுலேஸ்வரம்,
கீரிமலை,
காங்கேசன்துறை.
ஸ்ரீலங்கா


# கீரி மலை ஸ்ரீநகுலாம்பிகா சமேத ஸ்ரீநகுலேஸ்வரசுவாமி கோயில் ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள் அவர்களின் ஆசிச்செய்தி.

கைலை மன்னனால் வழிபடப்பட்ட ஆலயமும் 7ம்,8ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட ஆலயமான முல்லைத்தீவு பனங்காமம் சிவகாமி அம்பிகை சமேத கைலைநாதர் பஞ்சலிங்கேஸ்வரர் சுவாமிக்கு மகா கும்பாபிஷேகம் இனிதே சிறப்பாக நடைபெற்று எம்பெருமானின் ஆசிகளோடு அங்கு வாழ் மக்கள் அனைவரும் சகல வழங்களோடும், செல்வங்களோடும் வாழ வேண்டும் என்று கீரிமலை நகுலாம்பிகா தேவிசமேத நகுலேஸ்வரப் பெருமானுடைய ஆசிகளைக் கூறிக் கொள்கின்றேன்.

மென்மேலும் சகல செல்வங்களையும் பெற்று இவ்வாலயமும் அங்கு வாழ் மக்களும் வளர நகுலேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திப்போமாக,

ஓம் சாந்தி சாந்தி சாந்தி


அருட்கவியரசு
கண்மணிதாசன்


கு.நகுலேஸ்வரக்குருக்கள்
நகுலேஸ்வர ஆதினம்
நகுலேஸ்லரம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அருள்மிகு மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில்

மாவிட்டபுரம், தெல்லிப்பளை.

Arulmiku Maviddapuram Sri Kanthaswamy Temple

Maviddapuram, Thellipallai.

Reg. Number:- HA/5/JA/194


# அருள்மிகு மாவிட்டபுரம்
# ஸ்ரீ கந்தசுவாமி கோயில்

ஈழத்திருநாட்டிலே வடபால் முல்லைத்தீவு பனங்காமம் சிவகாமி அம்பாள் சமேத கைலைநாதர் பஞ்சலிங்கேஸ்வரர் ஆலயம் மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மாவை ஆதினம் பெரும் மகிழ்ச்சியுடன் மாவைக்கந்தன் திருவருட்கடாட்ஷத்துடன் மாவை ஆதீனப் பேரரசு ஆதீன கர்த்தாக்களின் குருவருளும் கிடைக்க வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றோம். கும்பாபிஷேக வைபவம் சிறப்புடன் நடைபெற்று சிவபெருமானின் அபரிமித அருட்கடாட்ஷத்துடன் புதுப்பொலிவு பெற்று மக்கள் சுபீட்சமாக வாழப்பிரார்த்திக்கின்றேன். இவ்வாலயம் 6ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மன்னர்களால் கட்டுவித்த போர்த்துக்கேயர் காலத்தில் அழிவுற்று மீண்டும் புதுப்பொலிவுடன் விளங்கி தற்சமயமும் அனர்த்தங்களுக்குட்பட்டு இப்போது மஹாகும்பாபிஷேகம் காண்கின்றதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

இங்ஙனம்

மாவை ஆதீனம் மஹாராஜாதி

து.ஷ. இரத்தினசபாபதிக்குருக்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கைலாஸநாத வேத சிவாகம பாடசாலை**

379/76 இருபாலை வீதி,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 2230331
0773726132
Email: kailasanathan@gamail.Com
www: kailasanathan.Com

ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்
1ம் வட்டாரம்
நயினாதீவு.
தொ.பே. 0213219513
0213734535

திகதி....../....../......

## அருளாசிச் செய்தி

இலங்கை திருநாட்டின் வடபால் வன்னிப்பெருநில பரப்பின் கண்ணே! முற்காலத்தில் மன்னார் மாவட்டத்திலே மாந்தை கிழக்கு பிரதேசமென வழங்கப்பட்டு தற்போது அப்பிரதேசம் முல்லைத் தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேசமாக உள்ள பகுதியில் அமைந்திருக்கும் பனங்காமம் கிராமத்திலே, கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். வரலாற்றுச் சிறப்பு மிக்க சிவாலயமானது, முற்காலத்தில் இப்பிரதேசத்தை அரசாண்ட சரித்திரப் பிரசித்தி பெற்ற தழிழ் மன்னன் கைலை வன்னியன் என்பவரினால் கட்டுவிக்கப்பட்டு பஞ்சலிங்கங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டு வணங்கப்பட்ட தலமாக அறியக் கிடக்கின்றது. அன்று முதல் இத்திருத்தலம் பனங்காமம் பஞ்சலிங்க மூர்த்தி தலம் எனவும் கனகாம்பிகை சமேத கைலைநாதர் ஆலயம் எனவும் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாலயம் கடந்த கால போர் அனர்த்தங்களினால் சிதைவுற்று இருந்த நிலையில் தற்போது புணர்நிர்மானப் பணிகள் நிறைவுற்று ஜயவருடம் சித்திரை 21ம் நாள் (04.05.2014) குடமுழுக்கு விழா நிகழ இருப்பது மிகவும் வரப்பிரசாதமாகும். இக் கும்பாபிஷேகப் பெருவிழா இனிதே நிறைவேறி கைலைநாதப் பெருமானின் திருவருளினால் நாட்டில் துன்ப துயரங்கள் எல்லாம் நீக்கி, சாந்தியும் சமாதானமும் நிலவும் ஆலயச் சூழலில் வாழும் மக்கள் சுபீட்சத்துடனும் மகிழ்ச்சியுடனும் வாழவும் எல்லாம் வல்ல கனகாம்பிகை சமேத கைலைநாதப் பெருமானின் திருவருள் எல்லோருக்கும் கிடைக்க பிரார்த்திப்பதோடு இத்திருத் தொண்டில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் எம்பெருமானின் அருட்கடாட்சம் கிடைக்கவும் இக்கும்பாபிஷேக மலர் சிறப்புற வெளிவரவும் ஆசிகூறி நயினை நாகபூசனியினதும், நயினை கைலாசநாதக் குருவினதும் அன்பும் ஆசியும் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

இவ்வண்ணம்

ஜெ. கைலை வாமதேவக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமே துணை

# ஆசிச்செய்தி

ஆலந்தானுகந்து அமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுதேற்றும்
சீலந்தான் பெரிதும் உடையானை
சிந்திப்பார் அவர் சிந்தை உள்ளானை
ஏலவார்க்குழாலன் உமைநங்கை
என்றும் ஏந்தி வழிபடப்பெற்ற
காலகாலனை கம்பன் எம்மானை
காணக்கண் அடியேன் பெற்றவாறே

ஸ்ரீ பனங்காமம் சிவாகாமி அம்பிகை சமேத கைலை நாதர் ஆலயம் தொன்மை வாய்ந்த சிவாலயங்களில் ஒன்றாகும். மேலைத்தேய ஆட்சியினரால் சைவசமையங்கள் சேதமாக்கி அழிக்கப்பட்டபோது சிவாலயக் கட்டடங்கள் முதலியவும் சேதமாக்கப்பட்டது ஆனால் சிவனின் அருள் அங்கே வேரூன்றி இருந்தமையால் பனங்காமத்தில் வசிக்கும் மக்களால் பராமரிக்கப்ட்டடு மீண்டும் தற்போது மஹா கும்பாபிஷேகம் காணும் அளவிற்கு உயர்ந்துள்ளது.

எம்பெருமானின் திருவருள் அதிசயங்களை அடியேன் 1978 தொடக்கம் 1987 வரை காலத்தில் பூசகராக பணியாற்றி நேரடியாக அனுபவித்து எனது முன்னேற்ற கரமான வாழ்க்கை கிடைக்கப்பெற்றேன் ஆகவே நான் பெற்ற அருள்போல எல்லா மக்களும் பெற ஈசனை வேண்டி நிற்கின்றேன்.

க.வீரமணி ஐயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமயம்

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

# SRI NAGAPOOSHANI AMMAN KOVIL

Regd.No / பதிவு இல. } HA/5/JA/567

தொலைபேசி / Telephone } யாழ்ப்பாணம் / Jaffna 070-213024

நயினாதீவு
NAINATHIVU
SRI LANKA

## பனங்காமம் சிவாலயம்

இதம் தாரும் மடந்தையோடு இசைந்துயிர் உடம்பு போல்
விதம் படு உலகினில் வலிந்தொளி விளங்குவார்
மதங்கமொடு துந்துபி வழங்கொழி முறங்கவே
சிதம்பர நடம் பயில் செழுங்கழல் இறஞ்சுவாம - திரு. புராணம்

வன்னி மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் 6ம் நூற்றாண்டில் பஞ்சலிங்கங்கள் எழுந்தருளி இருந்து அருள் சுரந்த சிவாலயம் தான் பனங்காமம் சிவாலயம் காலப்போக்கில் இங்கு இருந்த இரண்டு சிவலிங்கங்களை எடுத்துச் சென்று வன்னி மாவட்டத்தில் வேறு இடங்களில் பிரதிஷ்டை செய்ததாகவும் இப்போது இங்கு மூன்று சிவலிங்கங்களே வழிபாட்டில் உள்ளதாகவும் அறிய முடிகின்றது. ஈழத்துச் சிவாலயங்களில் மிகவும் தொன்மையும் சிறப்பும் பெற்ற சிவாலயங்களில் தொன்மையும் அருளும் மிக்க சிவாலயமாக வன்னி மாவட்டத்தில் இச் சிவாலயம் அமைந்துள்ளது. என்றால் மிகையாகாது.

இன்று இத்திருத்தலத்தின் தொன்மையினையும் சிறப்பினையும் இறைவனின் திருவருள் திறனினையும் சைவ உலகிற்கும் எம் சைவ சமூகசத்திற்கும் தெரியப்படுத்தவும் நாம் சென்று வழிபடவும் ஒரு வரப்பிரசாதமாக வழிகாட்டி உள்ளார்கள். இப்பெருமானின் திருப்பணியில் ஈடுபட்டு அரும்பணியாற்றி வரும் திருப்பணியாளர்களும். அறங்காவலர்களுக்கும் இது ஒரு போற்றுதற்கரிய செயலாகும். எமது எதிர்கால சமுதாயம் எமது தொன்மையினையும் வரலாற்றினையும் ஈழம் ஒரு சிவ பூமி என்ற மகத்துவத்தினையும், தம் பணி மூலம் செய்துள்ளார்கள். இது ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க செயலாகும்.

இத்தகைய வரலாற்றுப்புகழ் மிக்க இத்திருத்தலத்தின் புனரமைப்பு வேலைகள் சிறப்பாக நிறைவு பெற்ற பின் புனராவர்த்தனமகாகும்பாபிஷேகம் இடம் பெறுவதும் கும்பாபிஷேக வரலாற்று மலர் ஒன்று வெளிவருவதும், சிறந்த ஒரு ஆவலர் பதிவாகும். என்றால் மிகையாகாது இப்பெரும் பணியில் பல வகையிலும் அரும்பணியாற்றிய அறங்காவலர்கட்கும் ஆர்வலர்கட்கும் திருப்பணிக்கும் உதவிய சகலருக்கும், பெரும் சாந்தி விழாவை சிறப்புறச் செய்த குருமாருக்கும் தொண்டர்களுக்கும், அறப்பணி இதுவென்று பொறுப்புடன் தொண்டாற்றிய அனைவருக்கும், எம்பெருமானின் அருளாசி கிடைக்க வேண்டி எம்பெருமாட்டியாகிய அன்னை ஸ்ரீநாக பூசணியை வேண்டி பெரும்பணியில் இணைந்து செயலாற்றிய அனைவருக்கும் ஆசியையும் கூறிவைப்பதுடன் வாழ்க உங்கள் தொண்டும், பணியும், தொண்டர்கள் உங்கள் சிவன் சேவை .

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அன்னையின் அடியாள் ஆ. தியாகராசா
(ஓய்வு நிலை உதவி அரச அதிபர்)
தலைவர் ஸ்ரீநாகபூசணி அம்மன் கோயில்
நயினாதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையருள் பெறுவோமாக!

அகில உலகத்தையும் படைத்தும் காத்தும் அழித்தும். அருளியும் மறைத்தும் அனைத்து ஜீவராசிகளும் உயிரும் உடலும் போல் சக்தியும் சிவனுமாக விளங்குகின்ற எம்பெருமான் சர்வேஸ்வரன் கோயில் கொண்ட தலங்கள் ஈழத்தில் பல உள்ளன. அவற்றில் வன்னி மண்ணில் அடங்காப்பற்று என்று வரலாற்று ஆசிரியர்களால் வர்ணிக்கப்பட்ட பனங்காமபற்று இராச்சியமாகும். அத்தகைய சிறப்பு வாய்ந்த இராச்சியத்தின் வன்னி மன்னர்களால் கட்டப்பட்டு பூசிக்கப்பட்டு வந்ததாக அறியக்கிடக்கின்றது. இறைவனின் ஐவகை தொழில்களான பஞ்சகிருத்தியங்களை நினைவூட்டும் பொருட்டு பஞ்சலிங்கங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டு பூசிக்கப்ட்ட பெருமைக்குரிய ஆலயமாகும்.

சைவமென்பது சிவத்தை ஆன்மா அடையச் செய்யும் மார்க்கமாகும். சிவன் என்பது முழு முதற்கடவுள் அவர் ஆதியும் அந்தமும் இல்லாதவர், அருட்பெரும் ஜோதியானவர் அவர் திருவருளை பெற வேண்டுமானால் மனம், வாக்கு, காயம் என்ற திரிகரண சுத்தியோடு வணங்க வேண்டும். மனம் என்பது எமது உள்மனதிலே ஏற்படுகின்ற எண்ணங்கள், வாக்கு என்பது எண்ணங்களினால் வெளிப்படும் வார்த்தைகளும் செயற்பாடுகளும், இவை இரண்டும் சேர்ந்து காயம் உடலினால் செய்யப்படுகின்றது . ஆக இவை மூன்றும் இறைவழிபாட்டின் போது ஒருமுகப்படுத்தப்படல் வேண்டும். இவை மூன்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. நன்மையும், தீமையும் இவர்களின் தெரிவுகளே மனம் நினைக்க, வாய்சொல்ல, உடல் செயற்படுகின்றது. இதனால் போலும் மனித உடலை "காயமே கோயிலாக " என அப்பரடிகள் போற்றுகின்றார். ஆத்தோடு நிற்காமல்

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கின்ற பதிக வரிகளை நினைவில் கொள்ள வேண்டும். இவ்வாறு நாம் பிரார்த்தனையில் ஈடுபடுகின்ற போது எமது உள்ளத்தில் அன்பு கருணை ஜீவகாருண்ணியம் என்கின்ற இறையருள் பெருகிவிடும். நல்ல விதைகளே பெரு விருட்சங்கள் ஆகின்றன அந்த வகையில் நல்ல எண்ணங்களை மாந்தர்கள் மத்தியில் இறையருளையும் பக்தி மார்க்கத்தையும் பரவச்செய்கின்றன. ஆலயங்களை நிர்மானிக்க வேண்டும், புணரமைக்க வேண்டும். என்ற அவாவையும் தோற்றுவிக்கின்றன.

"யான் பெற்ற செல்வம் இவ்வையகம் பெற வேண்டும்." என்ற வள்ளுவருடைய வாக்கிற்கிணங்க இவ்வாலயத் திருப்பணியை சிறப்புற நிறைவேற்றி எம்பெருமானின் மகா கும்பாபிசேகத்திற்கு வழிசமைத்துக் கொடுத்த பரிபாலன சபையினருக்கும் உபயகாரர்களுக்கும் எல்லாம் வல்ல பரம் பொருள் பரமேஸ்வருனுடைய இறையருள் கிடைக்கப் பெற வேண்டுமென பிரார்த்திப்போமாக!

**"அவனருளாளே அவன்தான் வணங்கி"**


மா.வன்னியசிங்க மாப்பாணர்

பூசகர்/செயலாளர்


ஸ்ரீ முத்துமாரிஅம்மன் ஆலய திருச்சபை

வன்னிவிளாங்குளம்

மாங்குளம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்லிருப்பு கண்ணகை அம்மன் ஆலயதலைவரின் ஆசிச் செய்தி

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற ஆன்றோர் வாக்கிற் கிணங்க எமது அடங்காப்பற்று வன்னிமையில் பனங்காமம் பிரதேச மக்களின் வரலாற்று சிறப்பு மிக்க ஓர் ஆலயமாக கைலாய நாதர் பஞ்சலிங்கேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது.

நிறைவளங்களும் வீரமும் அடங்காத தன்மையும் கொண்ட கைலாய வன்னியனின் வம்சத்தினரால் வழிபடப்பட்ட இவ்வாலயமானது மீண்டும் புனருத்தரரனம் செய்யப்பட்டு புதுப்பொழிவுடன் நடைபெற வுள்ள கும்பாபிசேக நிகழ்வையொட்டி செளிவரும் மலருக்கு வாழ்த்து செய்தி வழங்கவதற்கு திருவருள் கூடியிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

மகிழ்வான குடும்ப வாழ்விற்கு அமைதியான யோக வாழ்விற்கும் இடம் தரும் சிவவழிபாட்டிற்கு ஏற்ற வகையில் இவ்வாலயமானது ஆகமமுறைப்படி அமையப்பெற்றமையானது எமக்கு கிடைத்த அரிய பொக்கிசமாகும் .

இவ்வடங்காப்பற்று பனங்காமம் பிரதேசத்தில் சிவவழிபாடு மேலோங்கி நின்றமைக்'கு கைலாய நாதர் கோயில் சான்று பகர்வது போன்று சக்தி வழிபாடு சிறப்பாக நிகழ்ந்தமைக்கு இம்மக்களாலும் அயற் கிராம மக்களாலும் வழிபட்டடு வருகின்ற மூன்று முறிப்பு கண்ணகி அம்மன் , கல்லிருப்பு கண்ணகி அம்மன் வன்னி வழாங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயங்கள் தக்க சான்றாக அமைகின்றன. இவ்வாலயம் ஆனது ஆன்மீக சமூக வாழ்விற்கு உதவி மேலும் பொழிவு பெற எல்லாம் வல்ல கைலாய நாதன திருவடிகளை வேண்டி நிற்கின்றேன்.

பரமநாதன் யோகநாதன்

தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

**ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை**

**SRI SITHI VINAYAGAR ALAYA PARIPALANA SABAI**

நட்டாங்கண்டல், மாங்குளம். | Regd No:- HA/5/MU/150-05/03/2005 | Naddankandal, Mankulam.



# அருட்கடாட்சம் பெருகட்டும்

மாந்தை கிழக்கு பனங்காமம் நட்டங் கண்டல் பகுதியில் வரலாற்றுப் பெருமை கொண்ட கைலாய நாதர் சிவாலயம் சகலஆலய பரிமானங்களுக்கு அமைவாக புதிதாக புனரமைக்கப்பட்டு எழில் மிகு வகையில் காட்சியளிக்கும் இவ்வேளையில் எம்பெருமானின் அருட்கடாட்சம் அனைவருக்கும் அருள் பாலிக்க எமது பகுதி மக்களின் மனதில் தோன்றிய கனவு நிறைவாகும் இவ் வேளையில் இவ்வாலய மகாகும்பாபிசேக பெரு விழா மிகவும் சிறப்பாக அமைய வேண்டுமென நட்டாங்கண்டல் ஸ்ரீ சித்தி விநாயக பெருமானின் துணை கொண்டு மனமாற வாழ்த்துகின்றேன்.

நா சிறீஸ் கந்தராசா

பொருளாளர்

ஆலய பரிபாலன சபை

நட்டாங்கண்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
**Sri Muthumari Amman Temple**
பரிபாலனசபை
நட்டாங்கண்டல். பதிவு இல: HA/5/MU/149-05/03/2005 Naddankandal.

# கும்பாபிஷேக பெரு விழா வாழ்த்துச் செய்தி



ஆலயம் ஆன்மாவை ஆற்றுப்படுத்தும் புண்ணியநிலையம் தினமும் ஆலயத்தை வலம்வருபவர்களிடம் ஆன்மபலமும் ஆரோக்கியமும் நிறைவாக காணப்படும் எம் மூதாதையர் எமக்குத் தேடிவைத்த பெரும் செல்வம் ஆலயம் என்றால் மிகையாகாது.

கால வரலாற்றுப் பெருமையும் பழமையும் வாய்ந்த வன்னியர்கள் ஆண்ட பனங்காமத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கைலைநாதர் ஆலய மகாகும்பாபிசேக பெருந்திருவிழா ஆண்டவன் அருளால் இனிதே நிறைவேற திருவருள் பாலித்துள்ளமை மட்டற்ற மகிழ்ச்சியையும் புத்தாக்கத்தையும் நமக்கெல்லாம் அருளையும் வழங்க அவனருளால் ஒப்பேறும் காரியமாகும்.

இவ்வாலயமானது எமது பகுதியில் மிகச் சிறப்பானதாகவும் நவக்கிரக சகல அம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள எம் பெருமானின் அருளைப் பெற்று வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல கைலை நாதரை பிரார்த்தனை செய்து ஆசி வழங்குகின்றோம். ,

நன்றி

திரு.கி. ஜெகதீசன்
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபைத் தலைவர்
நட்டாங்கண்டல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக பெரு விழா சிறப்புற நிறைவு பெறவேண்டி வாழ்த்துச் செய்தி

திருக்கோயிலில்லாத திருவிலூரும்
திரு வெண்ணீறணியாத திருவிலூரும்
பரக் கோடிப் பத்திமையாற் பாடாவூரும்
பாங்கினோடு பலதளிகளில்லாவூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதாவூரும்
விதானமும் வெண்கொடியுமில்லாவூரும்
அருப்போடு மலர் பறித்திட்டுண்ணாவூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே
(திருத்தாண்டகம்)

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் " என்றும்
"ஆலயம் இல்லா ஊருக்கு அழகுபாழ்" என்றும்
"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும்
ஆன்றோர்களினால் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

எமது மக்கள் வாழ்வில் ஏற்படுகின்ற துன்ப துயரங்களைக் களைந்து அவர் தம் வாழ்க்கைக்கு உறுதுணை புரிந்து உயர்வு காண்பதில் கோயில்கள் பெரும் பங்காற்றி வருகின்றன. சைவ மக்கள் மத்தியிலே ஆன்மீக தத்துவங்களை அறிந்து கொள்ளவும் எமது தமிழ்ப் பண்பாட்டு பாரம்பரிய மரபுகளை பேணிப்பாதுகாக்கவும் ஆலயங்கள் மிகவும் உயர்ந்த இடத்தை வகிக்கின்றன. இன்றைய நவீன உலகில் சமய நெறிகள், பண்பாடுகள் யாவும் மக்கள் மத்தியில் குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் அருகி வருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. எனவே இளம் சந்ததியினர் மத்தியில் சமய, கலை, கலாசார விழுமியங்களைப் பேணி வளர்ப்பதற்கு ஆலய வழிபாடு மிகவும் அத்தியாவசியமாகின்றது.

வன்னிப் பெருநிலப்பரப்பிலே கடந்த காலத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் சேதமாக்கப்பட்ட ஆலயங்களில் பல புனரமைக்க முடியாத சூழலில் பொருளாதார வளங்கள் இன்மையினால் கும்பாபிஷேகப் பெருவிழாக்கள் நடைபெறாது காலம் கடந்த நிலையில் இன்றும் உள்ளதைக் காணலாம்.

ஆலயங்களின் கும்பாபிஷேகப் பெருவிழாவானது ஆகக் கூடியது பன்னிரு வருடங்களிற்கு ஒரு முறையாவது நிறைவேற்றப்படவேண்டும். என்பது ஆகம விதிமுறையாகும். தெய்வ சாந்நித்தியத்தை வலுப்படுத்தி அருட்சக்தியை அதிகரிக்கச் செய்ய இது அவசியம்.

பிரபஞ்சமெங்கும் பரந்து விரிந்து நிற்கும் பரம்பொருளை சிவாச்சாரியர்கள் மந்திரம் பாவனை கிரியைகளின் மூலமாக அக்கினியிலும் கும்பத்திலும் ஆவாகனம் செய்து வழிபட்டு பிரதிஷ்டை செய்து வைக்கப்படும். திருவுருவத்தில் தெய்வ சாந்நித்தியத்தை ஏற்படுத்தவதே மகாகும்பாபிஷேகத்தின் சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமுத்திரத்தின் முத்தாக வர்ணிக்கப்படும் இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்துள் வன்னிப் பெரு நிலப்பரப்பில் தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள பனங்காமம் பற்றில் (மாந்தை கிழக்குப் பிரதேசம் )முற்காலத்தில் அரசாட்சி புரிந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற தழிழ் மன்னன். கைலை வன்னியன் என்பவனால் பனங்காமம் கிராமத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க சிவனாலயம் அமைக்கப்பட்டு ஐந்து லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு கனகாம்பிகை சமேத கைலைநாதர் கழலடியே கதியென்று பனங்காமத்தில் பஞ்சலிங்க மூர்த்திகளை வணங்கியதாக சரித்திர வரலாறுகள் மூலம் அறியக் கிடக்கின்றது.

சிறப்பு மிகு ஆலயம் கடந்த போர் அனர்த்தங்களினால் பல வருட காலமாக கும்பாபிஷேக விழா நடாத்தப்படாது இருந்தமை இப்பிரதேச சிவனடியார்கள் மத்தியில் பெரும் மனக்கவலையை ஏற்படுத்தியிருந்த நிலையில் பரிபாலன சபையினதும் சிவசிந்தை உள்ளவர்களினதும் அயராத உழைப்பினால் கும்பாபிஷேக பெருவிழா நிறைவேற உள்ளமை, மிக அற்புதமான நிகழவெனலாம். இத்திருப்பணிகள் நிறைவேற நிதியுதவி, பொருளுதவி உடலுழைப்பு நல்கிய அனைவரும் போறற்படவேண்டியவர்கள். இச்சிறந்த கைங்கரியத்தை முன்னிட்டு கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியிடப்படவுள்ளமை பாராட்டுவதற்குரியது. பல நூல்களில் விளங்கும் அரிய பல கருத்துக்களை ஒரே நூலில் கற்று அறிந்து கொள்ளத்தக்க சிறந்த வாய்ப்பு இதன்மூலம் கிடைக்கும்.

பழமையும் வரலாற்றுச் சிறப்பும் மிக்கதுமான இவ்வாலய மகா கும்பாபிஷேகம் ஞாபகமாக வெளிவரும் கும்பாபிசேக மலரானது. இச்சிவாலயத்தின் தொன்மைகளையும் சிறப்புக்களையும் என்றென்றும் நிலைத்து நிற்கச் செய்யும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இவ்வாலயம் புதுப் பொழிவு பெற்று இன்று கும்பாபிஷேகம் காண்பதற்கு அயராது பாடுபட்ட அத்தனை உள்ளங்களுக்கும் குறிப்பாக பரிபாலன சபையாருக்கும் கனகாம்பிகை சமேத கைலைநாதப் பெருமானின் திருவருட்கடாட்சம் பரிபூரணமாக கிடைக்க பிரார்த்தித்து கொள்வதுடன் கும்பாபிஷேக மலர் சிறப்புற அமைய எல்லாம் வல்ல கைலைநாதப் பெருமானின் கழலடியினை இறைஞ்சி வேண்டிக் கொள்கின்றேன்.

யாவற்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவற்குமாம் பசுவிற்கு ஒருவாயுறை
யாவற்குமாம் உண்ணும் போது ஒரு கைபிடி
யாவற்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே
(திருமந்திரம்)

இவ்வண்ணம்
சி. நடராசா
பரிபாலன சபைத் தலைவர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்
பாண்டியன் குளம்
ஓய்வு நிலை காணி அலுவலர் - துணுக்காய் /மாந்தை கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரவ பாராளு மன்ற உறுப்பினரின் ஆசிச்செய்தி

"வானமே இடிந்தபோதும் வன்னி மண்ணும் வணங்காது" என்ற ஆன்றோர் கூற்றுக்கு அமைவாக வன்னி பெருநிலப்பரப்பில் முல்லை மாவட்டத்தில் பணங்காமம் (பாணன்கமம்) எழுந்தருளி உள்ள சிவகாமி அம்பிகா சமேத கயிலை நாதர் சிவாலய மகாகும்பாபிசேக சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ் ஆலயமானது புரதான காலத் தொண்மைகளைக் கொண்டமைந்தமை எமது வன்னி மக்களின் கொடை என நான் கருதுவதுடன் இவ்வாலயத்தின் தொன்மை பற்றி பல்வேறு மக்களுடன் கதைத்த போது இது இராவணன் காலத்திற்குட்பட்ட திருக்கேதீச்சரத்தோடு தொடர்புபட்டதாகவும் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலத்தில் சிற்புற்றிருந்ததாகவும் அதன் பின்னர் இடிபாடுகளுக்கு உள்ளானதாகவும் வன்னியை ஆண்ட கைலைவன்னியன் அவ்வாலயத்தை சிறப்பாக பேணியதாகவும் அறியப்படுகின்றது.

அதன்பின்னர் இவ்வாலயம் பல இடிபாடுகளுக்கு உள்ளாகி 1950ம் ஆண்டளவில் பணங்காமம் பிரதேச கிராம சேவகனின் மகனால் கண்டுபிடிக்கப்பட்டு மீண்டும் புனருத்தாரணம் செய்து ஆலயத்தை புதுப்பித்தார்கள். சுற்றிலும் வயல்கள் சூழ அமைந்திருப்பது அவ்வாலயத்தின் சிறப்பாக கருதுகின்றேன். அது மட்டுமன்றி இந்த ஆலயம் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் எல்லையில் அமைந்திருப்பதும் இவ்வாலயத்தின் சிறப்பாக அமைகின்றது. இவ்வாலயத்தை புனருத்தாரணம் செய்த கிராம மக்கள் ஆலய நிர்வாகத்தினர் பொருள், நிதி உதவி வழங்கிய அன்பர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"அவன் அருளாலே அவன்தாழ் வணங்கி"

திரு ந.சிவசக்தி ஆனந்தன்
கௌரவ பாராளுமன்ற
உறுப்பினர் வன்னி மாவட்டம்.

அருட்கவியரசு கண்மணிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம், மா.ச.உ

වෛද්‍ය. පී. සද්‍යලිංගම්, ප. ස. ම

Dr. P. Sathiyalingam, M.P.C

சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சர், வட மாகாணம்

සෞඛ්‍ය හා දේශීය වෛද්‍ය අමාත්‍ය, උතුරු පළාත

MINISTER OF HEALTH AND INDIGENOUS MEDICINE, NORTHERN PROVINCE


எனது இல. මගේ අංකය My No. | உமது இல. ඔබේ අංකය Your No. | திகதி දිනය Date



"ஓம்நமச்சிவாய"

ஐந்து ஈச்சரங்களைப்பற்றி நாமெல்லாம் அறிந்துள்ளோம். ஆனாலும் அவற்றின் வரலாற்றிற்கு மேலான காலத்தொன்மையை கொண்ட இந்த சிவாலயத்தின் வரலாற்றைப்பற்றி காலம் தாழ்த்தி அறிந்துகொள்வதையிட்டு கவலையடைகின்றேன். காலத்தின் கோலம் கடந்தகால 30 வருட கொடியயுத்தம் எமது உயிர், சொத்து, கல்வி, கலாசார விழிமியங்களை அழித்ததுடன் எமது பிரதேசத்தின் புராதன வரலாற்றையும் ஆய்வு செய்யமுடியாமல் செய்துள்ளது.

இந்த சிவாலயத்தின் பிந்திய வரலாற்றில் ஒருவகையில் நானும் தொடர்புபட்டுள்ளதாகவே கருதுகின்றேன். எனது பூர்வீக கிராமமான வவுனியா சாஸ்த்திரிகூழாங்குளத்தில் மூலவிக்கிரகமாக சிவலிங்கமாக எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சிவபுரசுந்தரேஸ்வரப்பெருமானிற்கும் இந்த ஆலயத்திற்கும் தொடர்புள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றது. பஞ்சலிங்க வழிபாடு நடாத்தப்பட்ட இந்த சிவாலயத்திலிருந்து கொண்டு செல்லப்பட்டு காட்டில் அநாதரவாக விடப்பட்ட சிவலிங்கமே பின்னர் மடத்துவிளாங்குளத்திலிருந்து 1968 ஆம் ஆண்டில் எங்கள் கிராமத்திற்கு எடுத்துவரப்பட்டதாக சொல்லப்படுகின்றது.

ஒரு இனத்தின் அடையாளமாக விளங்கும் மொழி, கலாச்சார், மதம் என்பவற்றை பாதுகாப்பதினூடாகவே எமது இனத்தின் இருப்பை தக்கவைத்துக்கொள்ளமுடியும். அவ்வாறான திருப்பணியை செய்துகொண்டிருக்கும் சிவனடியவர்களுக்கும் ஆலய பரிபாலனசபையினருக்கும் எல்லாம்வல்ல கைலாயநாதர் அருள் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.


சுகாதார கிராமம்,
பண்ணை,
யாழ்ப்பாணம்.
T.Phone : 021 221 7401
021 221 7403

සෞඛ්‍ය ගම,
පන්නයි,
යාපනය.
Fax : 021 221 7402

Health Village,
Pannai,
Jaffna.
E.mail : sathiyaltak@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடமுழுக்குகாணும் பனங்காமம் கைலைநாதர் சிவாலயம்.

முல்லைத்தீவு மாவட்டம், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பனங்காமம் கிராமத்தில் வரலாற்று பிரசித்தி பெற்ற வன்னியர் காலத்துக்கு முற்பட்ட கைலைநாதர் சிவாலயம் புனரமைப்பு செய்யப்பட்டு குடமுழுக்கு பெருவிழா நடைபெறுவதையிட்டு நான் மிகவும் மனநிறைவடைகிறேன்.

இன்றைய உலகில் சிவ வழிபாட்டின் அவசியம் அனைவராலும் உணரப்பட்டு வருவதைக் காண முடிகின்றது. அன்பும், அறமும் நிறைந்த இந்துமதத்தின் ஆழமான உண்மைகளை வெளிக்கொணர்ந்து எதிர்கால சந்ததியிடம் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு இந்துக்களாகிய எங்கள் ஒவ்வொருவரினதும் வரலாற்று கடமையாகும். எனவே, ஆலயங்களை புனரமைத்து மக்களின் வழிபாட்டிற்கு விடும் அதேவேளை ஒவ்வொரு ஆலயமும் அறநெறிப் பண்புள்ள சமூகத்தைக் கட்டிக்காப்பதற்காக அறநெறிப் பாடசாலைகளை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வரலாற்று சிறப்புமிக்க பல ஆலயங்கள் கடந்தகால அசாதாரண சூழ்நிலையினால் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. அவை அரச நிதிமூலமும் அடியவர்களின் அருட்கொடைகள் மூலமும் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன அந்த வகையில் பெருமளவு விவசாயக் குடும்பங்களை கொண்ட பனங்காமம் சிவாலயம் நீண்டகாலமாக புனரமைப்பு வேலைகள் பூர்த்திபெறாத நிலையில் இருந்து இன்று ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

மேலும் குடமுழுக்கு பெருவிழா சிறப்பாக அமைவதற்கும் அதையொட்டி வெளிவரும் இம்மலர் சிறக்கவும் பனங்காமம் கைலைநாதரின் அருள்கிட்ட வேண்டும் என்றும் இறைவனை வேண்டுகின்றேன்.

நா.வேதநாயகன்.
மாவட்டச்செயலாளர்,
முல்லைத்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குடமுழுக்குகாணும் பனங்காமம் கைலைநாதர் சிவாலயம்.

அடங்கப்பற்று என ஆய்வாளர்களால் ஆராதிக்கப்பட்ட வன்னிப்பெருநிலப்பரப்பில் தொன்மைப்புகழுடன் விளங்கும் பனங்காமம் கிராமம்.

மருதமும் முல்லையும் சார்ந்த நீர்வளமும் நிலவளமும் நிறைந்த இம்மண் மானத்தையும் வீரத்தையும் மாண்பெனப் போற்றிய மறவர்களின் பூமியாகும். சோழப்பேரரசின் காலத்தில் இலங்கையை ஆட்சிபுரிய அனுப்பப்பட்ட வட தமிழகத்து வன்னியர்குல தளபதியர்களின் வழிவந்த பண்டார வன்னியன் என்ற வீர மறவன் ஆண்ட மண்.

பூர்வீகமாக இங்கு வாழும் குடிகளைக் காத்தருளும் பனங்காமம் சிவன் ஆலயம் இன்று புத்தெழுர்ச்சி காணும் நல்ல நிகழ்வு காணும் பாக்கியம் பெற்றமை நாம் செய்த தவப்பயனாகும் இன்னல்களே வாழ்க்கையான மக்கள் மனங்களின் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை வளர்ப்பது எமது அடிப்படையான ஆன்மீக உணர்வுகளே. அத்தகைய உணர்வுகளின் வடிகாலாக விளங்கும் சமய நிகழ்வுகளில் முக்கியமான ஒன்று கும்பாபிஷேகம் ஆகும்.

கல்லினாலும் மண்ணினாலும் சுதையினாலும் மனிதரால் உருவாக்கப்பட்டவை விக்கிரகங்களாகும். அவற்றுக்குத் தெய்வ சக்தியை உண்டுபண்ணுவதற்காக செய்யப்படும் பல கிரிகைகளில் ஒன்றுதான் கும்பாபிஷேகம்.

கும்பாபிஷேகம் காண்பது என்பது வாழ்நாளில் கிடைப்பதற்கரிய ஒரு வாய்ப்பாகும். அது போல் பன்னிரண்டு ஆண்டுகள் ஆலத்திற்குச் சென்று இறைவனை மன, மெய்களினாலே வழிபட்டவர்க்கு என்ன என்ன அருள் வருமோ அத்தனை அருளும் கும்பாபிஷேகத்தை ஷேபித்த ஒரு விநாடியில் வருமென உரைப்பவர்களும் உள்ளனர்.

சரித்திரப் பெருமை வாய்ந்த பனங்காமம் சிவாலய கும்பாபிஷேகம் காணும் அனைவர்க்கும் பாவங்கள் தொலைந்து சக்தியும் செல்வமும் பெருக சிவபுரத்தானை வணங்கி பிரார்த்திக்கின்றேன்.

சிவகுரு நாதர் திருவாகரன்
முன்னாள் உதவி அரசாங்க அதிபர்
மாந்தை கிழக்கு
செயலாளர்
முதலமைச்சர் செயலகம்
வடமாகானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாந்தை கிழக்கு பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

வரலாற்றுக் காலத்தில் மாந்தைப் பகுதியில் மாதோட்டத் துறைமுகமும், பனங்காமம் பற்றும் சிறப்பிடம் பெற்றிருந்ததை அறியக்கூடியதாக இருக்கின்றது. அருள்வளமும், பொருள் வளமும், பெருகி இருந்த இப்பகுதி அன்னியரின் ஆட்சிக்காலத்தில் சிதைப்பட்டு விட்டது. தொன்மையான வரலாற்றில் புதைந்திருக்கும் இக்கைலை நாதர் ஆலயம் எப்போது தோற்றம் பெற்றது. என்பது ஆய்வுக்குரியது. ஆனால் இங்கு காணப்படும் இலிங்கங்கள் சோழப்பெருமன்னர்கள் இலங்கையை ஆட்சி புரிந்த காலத்தில் அமைக்கப்பட்டதாக கருதப்படுகின்றது. முன்பு இவ்வாலயத்தில் ஐந்து இலிங்கங்கள் பூசிக்கப்பட்டு வந்ததாகவும் ஆனால் அதனால் **"பஞ்சஈஸ்வரர்"**ஆலயம் என அழைக்கப்பட்டதாகவும் அறிய முடிகின்றது. பனங்காமம் பற்றை ஆண்ட வன்னிச் சிற்றரசர்களின் கைலாய வன்னியனது ஆட்சிக்காலம பொற்காலம் எனக் கூறப்படுகின்றது. இவனால் இவ்வாலயம் பூசிக்கப்பட்டு வந்தது என்பதும் வரலாற்று உண்மை. ஒல்லாந்தர் காலத்தின் இறுதிப்பகுதியில் இவ்வாலயம் அழிக்கப்பட்டிருக்கலாம் என கருதப்படுகின்றது.

அழிவுபட்ட ஆலயத்தில் இருந்த இரண்டு இலிங்கங்களும், ஏனைய பழமை வாய்ந்த சிறப்பம்சங்களும் வேறு இடங்களுக்கு எடுத்து செல்லப்பட்டதாக அறிய முடிகின்றது. தொடர்ந்து இப்பிரதேசங்களில் நடைபெற்ற யுத்தங்கள், கொள்ளை நோய் பஞ்சம் என்பவற்றால், மக்கள் இறந்தும் ஏனையோர் பிற பிரதேசங்களுக்கும் சென்று விட எஞ்சிய மக்கள் இவ்வாலயத்தை வழிபட்டு வந்தனர்.

1962ஆம் ஆண்டை அண்டிய காலப்பகுதியில் இவ்வூர் மக்களும் பிற பகுதியைச் சேர்ந்த ஆர்வலர்களும் ஒன்று சேர்ந்து புனர்நிர்மானம் செய்து கும்பாபிசேகம் நடைபெற்றதாக கருதப்படுகின்றது. பின்னர் காலத்திற்குக் காலம் நடைபெற்ற அசாதாரண சூழ்நிலைகளாலும், மக்கள் ஆலயச் சுற்றாடலில் வசிக்காத காரணத்தினாலும் வழிபாடின்றி இருந்தது. 2007ஆம் ஆண்டு யூன் மாதமளவில் மக்கள் இப்பிரதேசத்தினை விட்டு முற்றாக வெளியேறி விட்டதனால் புனர்நிர்மானமும், வழிபாடு இன்றியும் இருந்தது. பின்பு மீளக்குடியேறி வந்த பின்னர் இவ்வாலயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாக சபையினரின் முயற்சியினாலும் பனங்காமத்திலும் ஏனைய பிற இடங்களையும் சேர்ந்த இவ்வாலயத்துடன் தொடர்புடைய வெளிநாட்டில் வாழும் அன்பர்களின் நிதியுதவியினாலும் குறிப்பாக இவ்வாலயத்தின் பரிபாலன சபைத்தலைவரும், ஓய்வு பெற்ற கிராம அலுவலருமாகிய திரு.சண்முகநாதன் அவர்களின் அயராதமுயற்சியினாலும் புனர்நிர்மாண வேலைகள் நடைபெற்று 2014 மே மாதம் 4ம் திகதி குடமுழுக்கு நடைபெறுவதை எண்ணி நான் பெருமகிழ்வடைகின்றேன்.

மக்களின் உடல் உள வளர்ச்சிக்கும் ஆலய வழிபாடு மிக மிக அவசியமானதொன்றாகும். உடல்,மன, சமூக ஆரோக்கியத்திற்கும் ஆன்மீக ஆரோக்கியம் முக்கியமானது. உடலும், உயிரும் சேர்ந்தே ஆன்மீகத்தை உருவாக்கலாம். இதற்கு ஒவ்வொரு ஊரிலும் ஆலயங்களும் அதனை வழிபடும் மக்களும் அதனால் அவர்கள் அடையும் பயன்களும் பெறுமதிமிக்கவை.

இவ்வாலயத்தின் பணிகள் மென்மேலும் தொடரவும் அதனால் மக்கள் பண்பட்டு பயன்பெறவும் எல்லாம் வல்ல கைலை நாத ஈஸ்வரர் அருள் புரிய வேண்டும் என பிரார்த்திக்கின்றேன். இவ் ஆலயத்தின் வளர்ச்சிக்கு பாடுபடும் அதன் தலைவர், செயற்குழு உறுப்பினர்கள், ஆலயத்தின் குருக்கள் அவர்களது குடும்பத்தினர், நலன் விரும்பிகள் யாவருக்கும் இறைவனின் பெரும் கருணை கிடைக்க வேண்டும் என வேண்டிக்கொண்டு இக் குடமுழுக்கு இனிதே நிறைவு பெற வாழ்த்துகின்றேன்.

திரு. T. பிருந்தாகரன்
பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம்
மாந்தை கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

*"மேன்மை கொள் சைவ நீதி*
*விளங்குக உலகமெல்லாம்"*

வளம் கொழிக்கும் வன்னித் திருநாட்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்க முல்லை மாவட்டத்திலே மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிலே பனங்காமம் பிரதேசம் அமைந்துள்ளது. காடும் காடு சார்ந்த இடங்களும் வயல் வெளிகளும் கொண்டு இயற்கை எழிலோடு அமைந்த இப்பிரதேசத்திலே மக்களின் அனைத்து துன்பங்களையும் நீக்கி தீராத வினைகள் எல்லாம் தீர்க்க வல்ல சிவன் ஆலயம் அமைந்துள்ளது.

அந்நியர் ஆட்சி நம்ஈழ வள நாட்டிலே புகுவதற்கு முன் பொருளாதார வளம் நிறைந்ததாகவும் காணப்பட்டதாக சரித்திரங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. அக்காலப்பகுதியிலேயே இச்சிவன் ஆலயமானது பிரசித்தி பெற்று காணப்பட்டது. நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க வரலாற்றினைக் கொண்ட இவ்வாலயம் அமைந்துள்ள பனங்காமம் பிரதேசத்தில் அந்நியர் ஆட்சியின் போது அந்நியருக்கு திறை செலுத்த மறுத்த அடங்காப்பற்று மன்னன் கைலை வன்னியன் ஆட்சி செய்ததாகவும் ஆதாரங்கள் சான்று பகர்கின்றன. அக்காலப்பகுதியிலேயே ஆலயம் அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெற்று வந்துள்ளது. பின்னர் குறித்த காலப்பகுதியில் அழிவடைந்து காணப்பட்டடு தற்போது புணர்நிர்மானம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்படுவதோடு மலர் வெளியீடும் நடைபெறுவது இறைவழிபாட்டினை மேலும் வலுவூட்டுகின்றது. அந்த வகையில் இம்மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்கி நிற்பதில் பெரும் மகிச்சியடைகின்றேன்.

அம்பலவாணர் தனிநாயகம்
தவிசாளர்
மாந்தை கிழக்கு பிரதேச சபை
நட்டாங்கண்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

வந்தோரை வாழவைக்கும் வளமிகு வன்னி மண்ணதிலே பண்டாரவன்னியனை புகழுரைக்கும் பனங்காமத்திலே நாகர், பல்லவர், சோழர் என பலராலும் வழிபடப்பட்டு ஒல்லாந்தரால் அழிக்கப்பட்டு 1962ம் ஆண்டு புனருத்தானம் செய்யப்பட்ட வரலாற்று சிறப்பு மிக்க பஞ்சலிங்கேஸ்வரர் ஆலயமான பனங்காமம் சிவகாமி அம்பிகை சமேத கைலைநாதர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதை ஒட்டி பெருமகிழ்வு அடைவதுடன் அனைத்து மக்களுக்கும் கைலைநாதரின் அருள் கிடைக்கவேண்டுமென சிரம் தாழ்த்தி வேண்டுவதுடன் ஆலயத்தின் புகழ் உலகளாவியரீதியில் வியாபித்து ஓங்கவேண்டுமென வாழ்த்தி நிற்கின்றேன்.

ம.யோகேசன்

(கிராம அலுவலர் - மூன்றுமுறிப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பனங்காமம் கயிலைநாதர் சிவாலயம்**

(பாணன்கமம் பஞ்ச இலிங்கேஸ்வரர் ஆலயம்)

நட்டாகண்டல், மாந்தை கிழக்கு.



பதிவு இலக்கம் HA/MU/86 புதிவுத் திகதி : 23-01-2003

## சிவகாமி அம்பிகா சமேத கயிலைநாதர் (பஞ்சலிங்கேஸ்வரர்) சிவாலய மஹா கும்பாபிசேகம்.

## கயிலைநாதர் சிவாலய பரிபாலனசபைத் தலைவர் அவர்களின் ஆசிச் செய்தி.



உலகமனைத்திலும் ஒப்பிலாதோங்கி இலகுபேரொளியாய் உலகை ஆட்டிப்படைக்கும் சக்தியாய், நான் என்ற ஆணவத்தை வேருடன் அறுக்கும் சக்தியாய் ஏகனாய் ஏகமுதல்வனாய், அடிமுடிகாணமுடியாத பரம்பொருளாய் இருப்பவர் நம் சிவகாமி அம்மை சமேத பஞ்சலிங்கேஸ்வர கயிலைநாதர்.

உய்வார் உதவி நிதி வாங்கி தம் திருப்பணி செய்வார், பெறுக ஓம் நமசிவாய என்னும் சமயநெறி வாக்கிற்கேற்ப பனங்காமம் பஞ்சலிங்கேஸ்வர கயிலை நாதரின் சிவ அடியார்கள் , தொண்டர்கள் திருப்பணியாலும் பனங்காமம் வாழ் வெளிநாட்டில் வசிக்கும் சிவ அன்பர்களின் நன்கொடையினாலும் இரவு பகல் அயராத உழைப்பினாலும் வந்தோரை வரவேற்கும் வளம் கொழிக்கும் பண்டைய புராதன பெயர் கொண்ட பனங்காமம் மண்ணில் பஞ்சலிங்கேஸ்வார் கைலைநாதர் சிவகாமி அம்மனை இடையில் விட்டுச் சென்று தடைப்பட்டிருந்த புனருத்தாரன வேலைகளை விரும்பி என் தலையாய கடமையாய் எண்ணி பொறுப்புடன் பொறுப்பேற்று ஓரளவு சிறப்பாகவும் நல்விதி முறைகளிலும் சிவனடியார்கள் கிராம மக்கள் அயல்கிராம மக்கள் பிரதேச மக்கள் போற்றும்வண்ணம் இத்திருப்பணி வேலைகளை முடிப்பித்துக் கொடுக்கின்றேன். எனது முயற்சிக்கு வெளிநாட்டு அன்பர்கள் உள்ளூர் அன்பர்கள் மற்றும் சிற்பாசாரி மேசன், ஈசன் வட்டக்கச்சி, பாலச்சந்திரன் அராளி, இவர்களும் பாராட்டுக்குரியவர்கள். அத்தோடு எமது நிர்வாக சபை உறுப்பினர்கள் கிராம மக்கள் அயல் கிராம மக்கள் கிராம வாகன உரிமையாளர்கள் உதவியும் திருப்பணி வேலைகள் செய்து முடிக்க உதவியாய் இருந்துள்ளது. சொல்லப்போனால் பஞ்சலிங்கேஸ்வரர் கைலைநாதர் எம்பெருமான் என்னுள் புகுந்து தன்திருப்பணி வேலைகளை நிறைவேற்றியுள்ளார். என்றுதான் நான் கருதுகின்றேன்.

கற்றதனாலாய பயன் கடவுளார்தம் நற்றான் தொழுதலே எனும் மெய்யுணர்வை நிலைநிறுத்த புதுப்பொலிவுடன் மலரவுள்ள பஞ்சலிங்கேஸ்வரர் கைலைநாதர் சிவகாமி அம்பிகை சமேத கும்பாபிசேக சிறப்பு மலர் சைவமும் மாண்புறு தமிழும் தலைத்தோங்கவும் இளம் சமூகத்தினருக்கு நல்வழிகாட்டவும் ஏதுவாக அமைந்துள்ளது. இம்மலரினை ஆழ்ந்து அகன்று நுண்ணிய அறிவுடன் அழகிய புத்தக வடிவில் கும்பாபிசேக மலரினை குறுகிய நாட்களில் வலிந்து விரும்பி பொறுப்பேற்று உருவாக்கிய திரு.கணபதிப்பிள்ளை விஜயகுமாரின் அறவாற்றல் பாராட்டுவதற்குரியது. எனவே சைவப்பெருமக்களாகிய நாம் இம்மலரினை கற்று அறிந்து வாழ்வில் எல்லாச்செல்வமும் பெற்று உயர்வோமாக, (நினைப்பதெல்லாம் நடந்து விட்டால்தெய்வம் ஏதும் இல்லை.)

ஓம் நம சிவாய

க. சண்முக நாதன் - தலைவர்

கைலைநாதர் சிவாலய பரிபாலன சபை, பனங்காமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பனங்காமம் கோயில் வரலாறு

வன்னி மண்ணில் வரலாற்று தடங்களை தன்னுள் பதித்து வைத்திருக்கும் பனங்காமம் இயற்கை வளமும் பழமையும் வாய்ந்த ஓரு இலிங்கம் கிராமமாகும். இக்கிராமத்தை கைலை வன்னியன் ஆட்சி செய்ததாகவும், இக்காலத்தில் அந்நியருடன் இடம்பெற்ற சண்டையால் இக்கிராமமும், கோயிலும் சிதைவடைந்தது. எனக்கு தெரியக்கூடியதாக எனது தாய் தந்தையர் காலத்தில் இக்கோயில் சிதைவடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு செல்லப்பா சுவாமிகளின் வழிகாட்டலில் புனருத்தாரனம் செய்யப்பட்டது. இங்கே ஐந்து லிங்கங்கள் இருந்தாக மூதாதையர் கூறுகின்றனர். இதில் ஓரு லிங்கம் வவுனியா சாஸ்த்திரி கூழாங்குளம் கிராமத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டு வழிபடப்பட்டு வருவதாக அறியமுடிகின்றது. மற்றையது பரப்புக்கால் பிரதேசத்துக்க எடுத்துச்செல்லப்பட்டபோது காட்டில் கைவிடப்பட்டதாக கூறப்படுகின்றது. தற்போது மூன்று லிங்கங்களே இக்கோயிலில் இருக்கின்றன. யுத்தம் காரணமாக இரண்டு முறை இடப்பெயர்வு ஏற்பட்டதால் கோயில் பாலஸ்தானம் செய்யப்பட்டு பூசைகள் நடைபெற்றன. கோயில் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு பதின் மூன்று ஆண்டுகள் கடந்து தற்போது ஓரளவு பணிகள் முடிந்துள்ள நிலையில் கும்பாபிசேக நிகழ்வு நடைபெறுவதையிட்டு என் மனம் புழங்காகிதம் கொள்கின்றது

பனங்காமம் சிவகாமி அம்பிகை சமேதர கைலாய நாதர் பெருமான் அடியார்கள் அனைவர்க்கும் சகல சௌபாக்கியங்களையும் வாரிவழங்க வேண்டிநிற்கின்றேன்.

செல்லையா சுப்பிரமணியம்

காப்பாளர்.

ஆலய பரிபாலன சபை

பனங்காமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச்செய்தி

தந்தையும் தாயுமாய் ஒன்றிணைந்து உலகத்தின் இயக்கத்திற்கெல்லாம் ஆதி முதல்வனாய் நிற்கும் எம்பெருமானுக்கு பஞ்ச ஈஸ்வரங்கள் அமைத்து வழிபாடு நிகழ்த்திய பெருமை எம் ஈழவழநாட்டிற்குரியது. எமது நாட்டில் ஆதிகாலந்தொட்டு நிலவிய வழிபாடுகளில் சிவ வழிபாட்டிற்கு முதலிடமும் தனி இடமும் உள்ளது. குறிப்பாக காடும் காடுசார்ந் மற்றும் வயலும் வயல் சார்ந்த பகுதிகளில் வாழந்த மக்களின் முழுமுதற் தெய்வமாகவும், காவற்தெய்வமாகவும் சிவன் வழிபடப்பட்டிருக்கிறான். வன்னியை ஆட்சிபுரிந்த மன்னர்களால் காலாதிகாலமாக வழிபடப்பட்ட சிவலிங்கப் பெருமான் இவ்வாலயத்தின் மூலவராக அமைந்திருக்கின்றார். சிவபூமி என அழைக்கப்படும் எம் ஈழதேசத்தில் வரலாற்று சிறப்புக்களும், சைவ விழுமியங்களும் மேலோங்கி காணப்படுகின்ற புண்ணிய பூமியாகிய வன்னிப் பிரதேசத்திலே காணப்படுகின்ற பழமை வாய்ந்த வரலாற்று சிறப்புமிக்க விவசாய கிராமமாக பனங்காமம் காணப்படுகின்றது. இக் கிராமத்திலே சிவகாமி அம்பிகை சமேத கைலாய நாதர் எழுந்தருளி உள்ளார். இது எம் கிராமத்திற்கு பெருமைவாய்ந்ததொன்றாகும்.

1945 ம் ஆண்டு காலப்பகுதியில் இடிபாடுகள் மத்தியில் காணப்பட்ட இச்சிவாலயமானது படிப்படியாக வளர்ச்சி கண்டு கும்பாபிசேக பெருவிழா காண்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இப்பெருவிழா சிறப்பாக முடிவுற எல்லாம் வல்ல அருள்மிகு சிவகாமி அம்பிகை சமேத கைலாய நாதர் திருவருள் சகல அடியார்களுக்கும் கிடைக்கப் பெற்று அவர்களின் துன்ப துயரங்கள் நீங்கி சீர் சிறப்போடு வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல கைலாய நாதர் பாதங்களை பணிகின்றேன்.

நன்றி

திரு. செல்லையா வரதராசா
முன்னாள் தலைவர்
ஆலய பரிபாலன சபை
பனங்காமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## பனங்காமம் கயிலைநாதர் சிவாலயம்

(பாணன்கமம் பஞ்ச இலிங்கேஸ்வரர் ஆலயம்)

நட்டாங்கண்டல், மாந்தை கிழக்கு.



பதிவு இலக்கம் HA/MU/86 பதிவுத் திகதி : 23-01-2003

# சிவகாமி அம்பிகா சமேத கயிலைநாதர் (பஞ்சலிங்கேஸ்வரர்) சிவாலய மஹா கும்பாபிசேகம்.

# கயிலைநாதர் சிவாலய பரிபாலனசபைத் செயலாளர் அவர்களின் ஆசிச் செய்தி.



பனங்காமத்தை தலைநகராக கொண்டு வன்னியை ஆண்ட தமிழ் அரசன் கைலாய வன்னியன் காலத்தில் சிறப்போடு வழிபாடு செய்யப்பட்ட தலமாக விளங்கிய பனங்காமத்தில் அமைந்த கைலைநாத சிவாலயம் பஞ்சலிங்கங்களை கொண்ட ஆலயமாகும். அந்நியர் ஆட்சிக் காலத்தில் இக்கோயில் பராமரிப்பின்றி சிதைந்து கிடந்தது. அக்காலத்தில் இங்கு வாழ்ந்த மக்கள் இடம் பெயர்ந்து வட பகுதியில் குடியேறி வாழ்ந்தனர்.

1950 ம் ஆண்டளவில் வீரேசு என்னும் பெயர் கொண்ட சின்னவிப்பூசாரி இக்கோயிலைக் காட்டினுள் கண்டறிந்து திருக்கேதீச்சரத்தில் இருந்த செல்லப்பா சுவாமிகளின் வழிகாட்டலில் வவுனிக்குளத்தில் நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு. ஆறுமுகம் அவர்களின் துணைகொண்டு அவரின் பொருளுதவியுடன் இக் கோயிலின் மூலஸ்த்தானத்தைக் கட்டி லிங்கப் பிரதிஸ்டை செய்து சின்னவிப் பூசாரியினால் பூசை செய்யப்பட்டு வந்தது.

பனங்காமம் என்னும் பெயரை யாவரும் அறியச் செய்த பெருமை அமரார். திரு.செ.கணபதிப்பிள்ளையைச் சார்ந்ததாகும். பனங்காமம் கைலைநாதர் சிவாலயத்தின் விழாக்களில் முக்கியமாக ஆடி அமாவாசையில் நடைபெறும் தீர்த்த உற்சவமாகும். பிதிர்க்கடன் செய்யும் அடியவர்கள் பெரும் திரளாக வந்து சிவன் தீர்த்தம் ஆடச்செல்லும் பறங்கி ஆற்றுக்கரைக்குச் சென்று அடியார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் பிதாவின் பிதிர்க்கடனைச் செய்வது விசேடமாக அமைந்து வந்தது. இன்று இக்கோயிலின் தலைவராக விளங்கும் ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் திரு.க. சண்முகநாதனின் அயராத முயற்சியினால் வெளிநாட்டில் வாழும் பனங்காமம் மக்களினதும், பனங்காமம் உள்ளூர் மக்களினதும், நட்டாங்கண்டல், மாந்தை கிழக்கு பிரிவு மக்களினதும் உதவி கொண்டு சிறுகோயிலாக இருந்த இவ்வாலயம் ஆகம முறைப்படி பெருங்கோயிலாகக் கட்டியெழுப்ப தலைவருடன் நிர்வாகத்தினரும் ஒத்துழைப்பு நல்கியுள்ளனர்.

கோயில் குருக்கள் ஐயாவின் தலைமையில் இக்கோயிலின் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற உள்ளது. இக்கோயிலின் நீண்ட காலத் தலைவராக இருந்து அரும்பணியாற்றிய காலஞ்சென்ற R.D.O திரு கிருஸ்ணபிள்ளையின் சேவை அளப்பரியதும் நினைவு கூறத்தக்கதுமாகும்.

நீண்ட காலத்தின் பின் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற எம்பெருமான் கைலைநாதரின் அருள்பாலித்துள்ளது. மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம் என்ற கூற்றுக்கமைய சிவனின் பூசைகள் விழாக்கள் நடைபெற்று, மக்கள் எல்லோரும் இன்புற்று தமிழர் கலாசாரம் பண்டைய வரலாற்றினை பறை சாற்றி நிற்கும் பனங்காமம் பிரதேசம் வாழ் மக்களும் இனிது வாழ வேண்டுமென்று எம்பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

இ. பூரணசற்குணலிங்கம்
செயலாளர்
கைலைநாத சிவாலய பரிபாலன சபை
பனங்காமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



**பனங்காமம் கயிலைநாதர் சிவாலயம்**

**(பாணன்கமம் பஞ்ச இலிங்கேஸ்வரர் ஆலயம்)**

**நட்டாங்கண்டல், மாந்தை கிழக்கு.**



பதிவு இலக்கம் HA/MU/86 புதிவுத் திகதி : 23-01-2003

## சிவகாமி அம்பிகா சமேத கயிலைநாதர் (பஞ்சலிங்கேஸ்வரர்) சிவாலய மஹா கும்பாபிசேகம்.

## கயிலைநாதர் சிவாலய பரிபாலனசபைத் பொருளாளர் அவர்களின் ஆசிச் செய்தி.



மன்னார் மாந்தைப் பிரதேசத்தில் புகழ் வாய்ந்த திருக்கேதீச்சரம் போல் முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பகுதியில் மிகவும் சரித்திரப் புகழ் வாய்ந்து இராசதானியாக விளங்கிய பனங்காமம் மண்ணில் எம்பெருமானாகிய சிவகாமியம்மை சமேத கைலாய நாதர் அமர்ந்து அருள் பாலிக்கின்றார்.

பல்வேறு பிரச்சனைகள் நிகழ்ந்த இக்காலகட்டத்தில் திருத்தலங்களின் வரலாறு அழிந்து செல்கிறது. எமது தலைமுறை அழிந்து போக எமது பின்னுள்ள சந்ததிகளுக்கு ஆலயங்களின் வரலாறு தெரியாது மழுங்கடிக்கப்படுகின்றது.

ஆகவே எமது ஆலயத்தின் வரலாற்றை அழியவிடாது பாதுகாப்பது அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்களின் பொறுப்பாகும். இக்காலகட்டத்தில் பொது நலமாக யோசிக்கும் மக்கள் அரிதாக காணப்படுகின்றனர். ஒரு ஆலயத்தின் வரலாற்றை அறிய வேண்டுமாயின் ஆலயத்தின் சார்பாக ஓர் மலர் வெளியிடப்பட வேண்டும். ஆகவே எமது பனங்காமம் எம்பெருமான் கைலாச நாதரின் வரலாற்றைக் கூறும் வகையில் கும்பாபிசேக மலரினை குறுகிய நாட்களில் விரும்பி பொறுப்பேற்று உருவாக்கிய மலராசிரியரின் முயற்சி வெற்றி பெற இவ்வாலயத்தின் பொருளாளர் என்ற வகையில் எனது ஆசியினை இவ் நூலாசிரியருக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொருளாளர்
பரராசசிங்கம் துரைசிங்கம்
கைலைநாத சிவாலய பரிபாலன சபை
பனங்காமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

பனங்காமம் அருள் மிகு சிவகாமி அம்பாள் சமேத கைலாய நாதப்பெருமானின் மகாகும்பாபிசேக பெருவிழா நடைபெறுவதையிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் மன நிறைவடைகின்றேன் ஒரு கிராமத்தின் அணி கலனாகவும் அத்திவாரமாகவும் அடி நாதமாகவும் விளங்குவன ஆலயமாகும். ஓர் ஆலயத்தின் சிறப்பிலும் அதன் எலுச்சியிலும் சமூக செயற்பாடுகளிலும் இருந்து அவ்வாலயம் சார்ந்த கிராமத்தின் சிறப்பை கூறலாம். ஆலயங்கள் ஆன்மீக வழியில் அறநெறியினை வளர்த்து பொது நோக்குடன் கூடிய சமூகம் சார் சிந்தனையின் அடிப்படையில அக்களின் வாழ்க்கையினை வழிப்படுத்தும் போது தான் அவற்றின் உண்மையான நோக்கமும் உயர்வான செயற்பாடுகளும் மக்களை சென்றடையும் இவ்வாலயம் அதற்கு ஓர் உதாரணமாக விளங்குவதனை சுட்டிக்காட்டுதல் பொருத்தமானதாகும்

மேலும் எனது தந்தையார் அமரர் கந்தையா கிருஸ்ண பிள்ளை அவர்களின் நெறிப்படுத்தலில் இவ்வாலயம் இருந்த காரணத்தால் ஆலயத்துடனான தொடர்பு எமக்கு கிட்டியது. வதிவிடத்திலிருந்து ஆலயமானது வெகு தூரத்தில் இருந்ததாலும் கூட பெருமானின் திருவருள் மேற்கொண்டு பரிபால சபையின் தலைவராக தந்தையார் இருந்து அறப்பணிகளில் பங்கேற்ற தன்மையை நெஞ்சத்தடத்தில் பதித்து பார்க்கின்றேன். இது பொருமான் மேல் அவர் கொண்ட அளவிலாப் பற்றுதலையும் அறப்பணிகளில் அவரின் நாட்டத்தையும் புலப்படுத்துகின்றது. என்பதை நினைத்து மனம் பூரிப்படைகின்றேன். அக்கால கட்டத்தில் கிராம மக்களுடன் இணைந்து ஆற்றிய சேவைகளில் ஆன்மீக முன்னெடுப்புக்களும் இவ்வேளையில் குறிப்பிடத் தக்கவை.


"பெரும் சாந்தி காணாது போதியோ பூம்பாவாய் " என்ற திருமுறை அடியை உள்ளத்தில் இருத்தி பெருமானின் கருணைக்கு பாத்திரமாகி மக்கள் நிலையான இன்பத்தை பெற்றிடவும் சமாதானமும் அமைதியும் கிடைத்து அனைத்து ஜீவராசிகளும் மகிழ்ந்திடவும் எல்லாம் வல்ல சிவகாமி அம்பாள் சமேத கைலாய நாதப் பெருமானின் அருட்பார்வை கிடைப்பதாக என்று வேண்டி அந்தண பெருமக்களின் ஆசி பெற்று ஆலய அறங்காவலர்கள் ஆலயம் சார்ந்த அனைத்து தொண்டர்களுக்கும் மனமுவந்து வாழ்த்து தெரிவித்துக் கொள்கின்றேன்.

அருட்கவியரசு கண்மணிதாசன்

கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணானந்தா
வடகாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பனங்காமம்
# கைலைநாத் சிவாலயம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமின் சிரிப்பும் பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும் இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால் மனிதப்பிறவியும் வேண்டுவதே யிந்தமா நிலத்தே.

(திருநாவுக்கரசர்)

இந்த உலகில் மகா ஆச்சரியமானதும், அற்புதமானதும், அபாயகரமானதும், விசித்திரமானதும் கொண்டது. நமது மனித மனம் அது குரங்கின் குணம் கொண்டது. நமது மனித மனம் நம்முடைய மனதில் நாள் தோறும் நிமிடத்திற்கு ஆயிரம் எண்ணக்கருத்துக்கள் நல்லதும், கெட்டதும் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கின்றன. அந்த எண்ணங்களில் உலகிற்கு நன்மை பயப்பன வற்றை கட்டுப்படுத்தி உரிய நிலைக்கு பக்குவப்படுத்தி ஆன்மீக ஈடேற்றத்திற்கு கொண்டுவருவது, ஆலய வழிபாடாகும். இதனால்தான் நம்முன்னோர் கிராமங்கள்தோறும் கோயில் அமைத்து வழிபாடு செய்து முத்தி அடைந்தனர். அதனால்தான் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் "காலையும் மாலையும் ஆலயம் தொழுவது சாலவும் நன்று "என்று நமது ஒளவைப்பாட்டி மொழிந்தார்.

இக்குறைபாட்டை நிறைவேற்ற பனங்காமம் கிராமத்தில் பழைய கைலைநாத சிவனை மிகச் சிறந்த முறையில் புனரமைப்பு செய்துள்ளனர். இக்கோயில் புனரமைப்பிற்கு சுற்றியுள்ள கிராமத்தவர் பனங்காமத்து வெளிநாட்டில் வசிப்பர்கள் போன்றோர் பணஉதவி, சரீரஉதவி செய்து கொண்டு இருக்கின்றனர். பனங்காமம் சிவன் ஆலயத்தைச் சுற்றியுள்ள கிராம மக்கள் பனங்காமம் நட்டாங்கண்டல், பாண்டியன்குளம், மூன்றுமுறிப்பு போன்ற மக்களுக்கு வழிபாடு செய்வதற்கு இக்கோயில் வரப்பிரசாதமாகும்.

"தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி " வழிபாடு செய்து மனித பிறப்பை நீக்கி முத்தி அடைவோமாக,

வே. கனகசபை
ஓய்வுபெற்ற அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பனங்காமமும் பஞ்சலிங்கேஸ்வரர் ஆலயமும்

இந்து சமுத்திரதின் முத்து என வர்ணிக்கப்படும் இலங்கைத் தீவின் வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பாண்டியன்குளம் பிரதேசசெயலகப் பிரிவில் அமைந்துள்ள தொன்மை வாய்ந்த கிராமம் பனங்காமம். இது முன்னர் பாணன்கமம் என அழைக்கப்பட்டது. தொன்மையானதும் வலிமைகொண்ட வன்னியர் ஆட்சியின் தலைமைப் பீடமாக விளங்கியது. அதற்கு சான்றுகள் பல வரலாற்று ஆய்வாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தென்னிந்தியாவில் இருந்து காலா காலமாக கி.மு 7ம் நூற்றாண்டு முதலாக இலங்கையின் கரையோர மாகாணங்களில் பெருங்கற் பண்பாட்டு மக்கள் குடியேறினர். அவர்கள் அமைத்த குடியேற்றங்களை அடிப்படையாக கொண்டு கிராமங்கள், நகரங்கள், பண்டமாற்று நிலைகள், குறு நில அரசுகள் உருவாகின. அவ்வாறு உருவாகிய பனங்காமப் பற்றும் பல சிறப்புகளைக் கொண்டு மிளிர்கின்றது எனலாம்.

தமிழரின் தேசம் என்று ரொபேட் நொக்ஸ் குறிப்பிடுவது அடங்காப்பற்று வன்னியில் உள்ள மிகப் பெரும் பிரிவான பனங்காமப்பற்று என்பதாகும். **தமிழர் தேசம்** என்பதை கொய்லத் வன்னி நாடு (**கைலாய வன்னி** நாடு) என்று ரொபேட் நொக்ஸ் குறிப்பிடுகின்றார். கைலாய வன்னியன் அடங்காப்பற்று வன்னியரில் மிகவும் பிரசித்தமானவன் யாழ்ப்பாணம் மீது படையெடுத்துச் சென்று போர்த்துக்கேயர் சங்கிலி குமாரனை தோற்கடித்த காலத்தில் சங்கிலி குமாரனுக்கு துணையாக இருந்த வன்னியரில் கைலாய வன்னியன் முதன்மையானவன். போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய பின்பு நல்லூருக்கு கப்பம் செலுத்துவதற்கு கயிலைவன்னியன் மறுத்துவிட்டான். ஏறத்தாள பதினான்கு வருடங்கள் திறைசெலுத்தாது ஆட்சிபுரிந்தான். மற்றைய வன்னிபங்களும் அவனுடைய தலைமையை ஏற்றுக் கொண்டதோடு பறங்கியரிடம் சென்று திறை செலுத்தியதை நிறுத்தி விட்டனர். கைலைவன்னியனுடைய ஆட்சியின்போது பனங்காமம் பாதுகாப்பு மிகுந்த இராசதானியாக விளங்கியது.

அடங்காப்பற்று வன்னியில் ஆட்சி புரிந்த பனங்காமம் பற்றின் மிகுந்த வீரமும் சுதந்திர தாகமும் கொண்ட மன்னனாகிய கைலை வன்னியன் கி.பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1678 ம் ஆண்டு மரணமானான். இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட மன்னன் பனங்காமப் பற்றில் அமையப் பெற்ற கைலாய நாதரின் அருளைப் பெற்று வழிபாடுகளை மேற்கொண்டான் என வாய் மொழிக் கதைகள் மூலம் அறியமுடிகின்றது.

17ம், 18ம் நூற்றாண்டுகளில் ஒல்லாந்தர் அடங்காப்பற்று என்பதையே வன்னி என்று குறிப்பிட்டனர். இதில் பனங்காமம், கரிக்கட்டு, மூலை கருநாவல்பத்து, முள்ளியவளை, மேற்பத்து, தென்னைமரவடி என்னும் ஆறு பிரிவுகள் இருந்தன என இலங்கையின் வன்னி மாவட்டங்கள் எனும் நூலில் ஜே.பி லூயிஸ் குறிப்பிடுகின்றார். பனங்காமப் பற்று_23 கிராமங்களை உடையது._இது வன்னி பிரதான அதிகாரியின் தலைமைச் செயலகமாக இருந்துள்ளது. என்பதையும் பழம் பெரும் கிராமம் என்பதையும் அங்கு வானளாவ வளர்ந்து நிற்கும் புளியமரங்கள் உணர்த்துகின்றன. அது மட்டுமன்றி இக்கிராமத்தின் தொன்மை பற்றி காசிச்செட்டியாரின் இலங்கையின் விசேடங்களை குறிக்கும் அகராதியில் பின்வருமாறு குறிப்பிடப்டுகின்றது. "வன்னியில் பனங்காமம் ஒரு கனிசமான கிராமம் இது திருகோணமலை வீதியில் விடத்தல் தீவுக்கு கிழக்கே 20 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. இது முன்பு ஓர் வன்னிச்சியின் வாசஸ்தலமாக இருந்தது. இங்கே பல நெல் வயல்களும் குடியிருப்பாளர்களின் வீடுகளும் தென்னை மரங்களும் புளிய மரங்களும். இருக்கின்றன" இவ்வாறு பனங்காமத்தின் பழமைபற்றிய குறிப்புக்கள் வரலாற்றின் மூலம் அறியமுடிகின்றது. பனங்காமத்திற்கு தெற்காக வீரப்பர்ஜயன் குளமும் (வீரப்பராயன்குளம்) வட கிழக்காக மிகவும் செழிப்புள்ள நட்டாங்கண்டல் கிராமம் அமைந்துள்ளது.

பனங்காமப் பற்று இயற்கை வளம் நிறைந்தது. காடுகளில் பெறுமதி வாய்ந்த மரங்களும் பல்வகையான வன விலங்குகளும் வளம் நிறைந்த வயல் நிலங்களும் தோப்புக்களும் குளங்களும் குளங்களை போசிக்கும் சிற்றாறுகளும் காணப்டுகின்றன. வட இலங்கையின் தானியக் களஞ்சியம் என்பதும் உண்மை. இயற்கையுடன் இணைந்த மக்கள் வாழ்க்கை முறை பால், நெய், தயிர், தேன் என்பன மக்களின் உணவில் முக்கிய பங்கு வகிப்பவை இத்தகைய செழுமை கொண்ட பனங்காமம் பகுதியில் கைலாய நாதர் ஆலயம் அமையப்பெற்றுள்ளது. அடங்காப்பற்று வன்னியில் பல சிறப்பு மிக்க சிவன் ஆலயங்கள் உள்ளன. அவற்றின் தோற்றம் பற்றிய காலவரையறை செய்து கொள்ள முடியாதுள்ளன. பனங்காமம் கைலாய நாதர் ஆலயமும் அவ்வாறே அமையப் பெற்றது. இராவணனுடைய காலத்தைச் சார்ந்த ஆலயம் என பலராலும் கூறப்படுகின்றது. இலங்கையில் கி.பி. 10ம் நூற்றாண்டில் சோழர் ஆட்சியின்போது ஈழத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசமயமானது மேலும் நிலைநாட்டப்பட்டது. பல இடங்களிலும் சிவாலயங்களை கட்டினர் அத்துடன் பிராமணக் குடியிருப்பக்களும் உருவாக்கப்பட்டதாகவும் சைவமும் சைவசமயப்பண்பாடுகளும் பெருவளர்ச்சியடைந்தன பல சிற்றரசுகள் தோற்றம் பெற்றன. அவ்வாறே வன்னியிலும் சிற்றரசுக் காலத்தில் சைவம் அதி உன்னத வளர்ச்சியை அடைந்தது. சிவாலயங்கள் பேணிப்பாதுகாக்கப்பட்டு வளர்ச்சி அடைந்தமை வரலாற்று நிகழ்வாகும். அந்த வகையில் பனங்காமம் பதியுறை சிவன் ஆலயமும் முக்கியம் பெறுகின்றது.

பனங்காமம் கைலை நாதர் சிவாலயம் திருக்கேதீச்சரத்தை ஒத்த காலப்பகுதிக்குரியதாக அமைக்கப்பட்டிருக்கலாம என நம்பப்படுகின்றது. கற்களில் உள்ள குறியீடுகள் கருங்கற்களின் தன்மை அமைப்பு முறையாவும் ஒத்த தன்மையைக் கொண்டுள்ளன. வன்னியில் உள்ள சிவாலயங்களில் வரலாற்றுப் பழமை வாய்ந்த சிறப்புமிக்க ஆலயமாக பனங்காமம் கைலை நாதர் சிவாலயம் மிளிர்கின்றது.

மூர்த்தி, தலம், தீர்த்தம், மூன்றும் முறையாய் தரிசித்தவனுக்கு வார்த்தை சொல்ல சற்குருவும் வாய் திறந்திடுவான் என்ற தாயுமானவர் கூற்றின் படி இம்மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற சிவாலயமாக பனங்காமப் பதி உறை கைலாய நாதர் ஆலயம் குறித்துரைக்கத்தக்கது.

தீருக்கேதீச்சரத்திற்கு பாலாவித் தீர்த்தமும் கோணேச்சரத்திற்கு பாவநாச தீர்த்தமும் போல் பனங்காமம் கைலாசநாதருக்கு பறங்கியாறும் தீர்த்தக்கரையாய் அமைந்துள்ளது. இவ்வாலயமானது அமைந்துள்ள சூழல் அடியார்கள் மனதில் அமைதியையும் பக்தியையும் உருவாக்கக்கூடிய வகையிலும் ஆலயச்சூழலில் அருவியும் அடர்ந்த காடுகளும் வயல்நிலங்களும் குளமும் அமையப்பெற்றுள்ளது. அன்னியரின் வருகையால் ஈழத்தின் சைவசமயம் சார்ந்த வழிபாட்டிடங்கள் அழிக்கப்பட்டன, பராமரிக்கப்படாது கைவிடப்பட்டிருந்தன அவ்வாறே பனங்காமம் பற்றில் இருந்த சிவன் ஆலயமும் அதனை அண்டிய பகுதியும் காடாக மாறியிருந்தது.

1950 காலப்பகுதிகளில் காட்டின் மத்தியில் இடிபாடுகளினுள் சிவலிங்கங்கள் இருந்த நிலையில் அமரர் பொன்னுச்சாமி வீரகேசு (சின்னவியர்) என்பவரால் அடையாளம் காணப்பட்டது. இவர் அப்பிரதேச வாசியான அமரர் பொன்னுச்சாமி விதானையாருடைய மகனாவார். இவருடைய சகோதரர் சரவணமுத்து அப்பிரதேச பதிவாளராக கடமையாற்றியுள்ளார். பொன்னுச்சாமி விதானையாரின் பின்னர் அமரர் வேலாயுதர் செல்லையா இப்பிரதேசத்தின் பொலிஸ் விதானையாராக 1921- 1952 வரை கடமையாற்றினார். இக்காலத்தில் பெரிய உடையாரின் மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பொன்னு உடையார் மூன்று முறிப்பு கிராமசேவகர் பிரிவில் கடமையாற்றினார். செல்லையா விதானையார் மூன்று முறிப்பு பகுதியைச் சார்ந்த தங்கப்பொன்னு என்னும் பெண்ணை திருமணம் செய்து பூரணம் நாகம்மா, பரராஜசிங்கம் என்னும் பிள்ளைகளை பெற்றெடுத்தனர். காலத்தின் கோலத்தால் தங்கப்பொன்னு சில வருடங்களில் இயற்கையை எய்திய பின்னர் அதே ஊரைச் சேர்ந்த உறவினரான சின்னாச்சி என்பவரை மறுமனம் செய்து கொண்டார். சின்னாச்சி என்பவர் சங்கரப்பிள்ளை - அரியாச்சி என்பவர்களுடைய புதல்வி ஆவார். அத்துடன் பனங்காமத்தில் வசித்த பெரிய உடையார் எனப்படும் ஞானசேகரம் உடையாரின் பெறாமகளும் ஆவார் செல்லையா சின்னாச்சி தம்பதிகளுக்கு கணபதிப்பிள்ளை, குலசேகரம், மகேஸ்வரி, காந்திமதி, சுப்பிரமணியம், மங்கையற்கரசி, வரதராஜா, பூலோகசிங்கம், ஆகியோர் பிள்ளைகளாக வாக்கப்பெற்றனர்.

செல்லையா விதானையாரின் பிள்ளைகள் அனைவரும் இவ் ஆலயத்தினுடைய வளர்ச்சியில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டார் இவர்களுடன் இணைந்து பூசாரியாரின் (சின்னவியர்) பிள்ளைகளான தங்கராசா தம்பிஐயா, செட்டி ஆகியோரும் ஆலய வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டிருந்தனர். அக்காலப்பகுதியில் இக்கிராமத்தில் வாழ்ந்த பொன்னையா, சரவணையர், நடராசா ஆகியோரும் இவ் ஆலய வளர்ச்சிக்கு பங்களிப்பை நல்கியிருந்தனர்

செல்லையா விதானையாரின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் சின்னவிப் பூசாரியாரின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் பழமையும் பெருமையும் வாய்ந்த இவ் ஆலயத்தை புனருத்தானம் செய்து கும்பாபிஷேகம் காணும் பாக்கியத்தை பெற்றிருக்கின்றார்கள்

செல்லையா சின்னாச்சி தம்பதிகள் பனங்காமத்தில் வசித்துவந்தனர். சின்னாச்சி சிறந்த சிவத் தொண்டர் என்பது குறித்துரைக்கத்தக்கது இவர் தான் வாழ்ந்த காலப்பகுதியில் பெரும்பகுதியான நேரத்தை கோயிலில் சரியைத் தொண்டை செய்து வாழ்ந்தமை மட்டுமல்லாமல் தனதுபிள்ளைகளையும் சைவசமய விழுமியங்களுக்கேற்ப வளர்த்தார் இவர் வெள்ளிக்கிழமைகள்தோறும் குளத்தில் நீராடி சிவாலயத்துக்கு சென்று சிவதர்சனம் செய்துவந்த காட்சி எம் கண்முன் நிழலாடுகின்றது தனது முதுமைக்காலத்திலும் சிவாலயத்தின் இரண்டாம், மூன்றாம் மண்டபங்களையும் அமைத்துக் கொடுத்துள்ளார். இதற்கான மரங்களை திரு. முருகேசு தேவராசா அவர்களும், கூரை ஓடுகளை அப்போது கோவில் பூசை செய்துவந்த வீரமணி ஐயா அவர்களும் வழங்கியமையும் எடுத்துரைக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பெருமான் அமைந்துள்ள இடத்திற்கு அருகில் செல்கின்ற பாலம்பிட்டி வயல் வீதி முன்னாள் ஆலய பரிபாலனசபைத் தலைவர் அமரர் செல்லையா கணபதிப்பிள்ளை அவர்கள் கிராமோதய சபைத் தலைவராக இருந்த காலத்தில் அமைக்கப்பட்டது. இவர் அக்காலத்தில் மன்னார் மாவட்ட செயலாளராக கடமையாற்றிய திரு.கதிர்காமநாதன் அவர்களைத் தொடர்பு கொண்ட போது அவர் திருக்கேதீஸ்வர கோவிலில் இருந்த செல்லப்பா சுவாமி அவர்களின் தொடர்பை பெற்றுக்கொடுத்தார். அதன் பின்னர் செல்லப்பா சுவாமியார் பனங்காமத்திற்கு வருகை தந்து கோவில் இருந்த இடஅமைவைப் பார்வையிட்டு இங்கு ஒரே நேரத்தில் ஐந்து இலிங்கங்களுக்கு பூசை நடைபெறுகின்ற பஞ்ச இலிங்கேஸ்வர ஆலயமாக இது இருந்திருக்கின்றது என்றும் மூன்று இலிங்கங்களே தற்போது காணப்படுகின்றது என்றும் கூறியிருந்தார்

இவற்றில் ஒன்று கோவில் குஞ்சுக்குளம் என்னும் இடத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு அது மடத்து விழாங்குளம் என்னும் இடத்தில் கைவிடப்பட்டிருந்ததாகவும் பின்னர் அதனை சாஸ்திரிகூழாங்குளம் பகுதியைச் சார்ந்த மக்களால் எடுத்துச்செல்லப்பட்டு பிரதிஸ்டை செய்யப்பட்டு வழிபாடு செய்யப்படுவதாகவும் அறியமுடிகிறது. இச்சம்பவத்தை அவ்வூர் மக்களும் கூறுகின்றனர். மற்றொரு இலிங்கமானது பரப்புக்கால் என்னும் இடத்துக்கு எடுத்து செல்லப்படும் வழியில் ஆற்றில் கைவிடப்பட்டதாக கூறப்படுகின்றது.

செல்லப்பா சுவாமி அவர்கள் ஏறத்தாழ இரண்டு வருட காலம் கோயிலடியில் தங்கியிருந்து ஆகம விதிப்படி கோவிலை கட்டுவித்தார். இக்கோயிலின் நிர்மானவேலைக்கான பொருட்களை அக்காலப் பகுதியில் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியியலாளராக கடமையாற்றிய திரு ஆறுமுகம் அவர்கள் வழங்கியுதவியுள்ளார். இவர் பனங்காமத்தில் வசித்துவந்த ஞானசேகரம் உடைச்சியாரின் நெருங்கிய உறவினராவார். இவ் ஆலயத்தின் கட்டட வேலைகளை வட்டுக் கோட்டையில் இருந்து அழைத்து வரப்பட்ட ஆசாரிகளும் கிராம மக்களும் இணைந்து மேற்கொண்டார்கள் என்று நட்டாங்கண்டலுக்கு அயல் கிராமமான இராமியன்குளத்தில் தற்போது வசித்துவரும் சின்னாச்சியின் உறவினரான திரு.மாரிமுத்து (94 வயது)அவர்கள் மூலம் அறியமுடிகினறது. கோவில் கட்டப்பட்டதன் பினனர் பொன்னுச்சாமி வீரேசு என்பவரே பூசைகளைச் செய்து வந்தார். 1970 ஆம் ஆண்டளவில் கோயிலுக்கு நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. இதன் தலைவரான செல்லையா விதானையாரின் வாரிசான கணபதிப்பிள்ளையும் செயலாளராக மருமகன் கந்தையா பரமநாதனும் இணைந்து ஆலயப் பணிகளை திறம்பட மேற்கொண்டனர். பனங்காமம் கைலாயநாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தில் ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறும் பிதிர் கடனாம் ஆடி அமவாசை விரதம் இவர்கள் காலத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டு இன்று வரையும் நடைபெறுகின்றது. 1990ம் ஆண்டு ஆடி அமாவாசை தினத்தன்று நிலம் எங்கும் நீர் வற்றியிருந்த காலம். அவ்வாறிருந்தும் பறங்கியாற்றில் தீர்த்தத்துக்காக எம்பெருமான் நீராடச் சென்ற தருணத்தில் ஆற்றில் சில குழிகளில் மட்டும் நீர் தேங்கியிருந்தது. ஆற்றின் நடுப்பகுதி மணல் மேடாகவே காட்சியளித்தது. அப்போது பேர் இரைச்சல் ஒன்று காதுகளில் ஒலித்த சில வினாடிகளில் ஆற்றிலும் அலைமோதும் என்று கூறும் அளவிற்கு மூன்றடி உயரத்தில் திடீரென நீர் உறுண்டோடி வந்த காட்சி அனைவரது மனங்களிலும் ஓர் அற்புதச் செயலாகவே எண்ணத்தோன்றியது.

அவ்வகையில் மேற்கூறிய தினத்தில் நடைபெற்ற தீர்த்தமாடல் நிகழ்வே எனது தந்தையின் வாழ்வின் இறுதி தீர்த்தமாடல் என்பதையும் இத்தருணத்தில் நினைவுகூறுகின்றேன். தீர்த்தக்கரையான பறங்கியாற்றுக்குச் செல்லும் பாதை அமைக்கப்பட்டதும் இக்காலத்தில் என்பது குறிப்பிடத்தக்கது. செல்லையா கணபதிப்பிள்ளை அவர்கள் கிராமோதய சபைத் தலைவராகவும், கந்தையா பரமநாதன் கிராமசேவையாளராகவும், வடகாட்டினைச் சேர்ந்த க. கிருஸ்ணபிள்ளை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் (R.D.O) ஆகவும் இருந்தமையால் பல்வேறு தரப்பினருடன் தொடர்புகளை மேற்கொண்டு கிராம மற்றும் ஆலய அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு உதவியாகவும் இருந்துள்ளது.

இதற்கு பின்னர் அமைக்கப்பட்ட நிருவாக சபையின் தலைவராக க.கிருஸ்ணபிள்ளையும் (R.D.O) செயலாளராக – மூன்றுமுறிப்பு கிராமசேவகராக கடமைபுரிந்த திரு க. சண்முகநாதனும் பொருளாளராக பரராஜசிங்கம் குலசிங்கமும் தெரிவுசெய்யப்பட்டு அபிவிருத்திபணிகள் பல மேற்கொள்ளப்பட்டன. தலைவராக இருந்த க. கிருஸ்ணபிள்ளை பனங்காமம் கைலாயநாதரில் பற்றுறுதிகொண்டவர்ஆலயவராற்றில் இவருடைய பணி அளப்பரியது.

1990 காலப்பகுதியில் புதிய நிருவாகசபை தெரிவு செய்யப்பட்டது. தலைவராக க. தர்மகுலசிங்கமும் செயலாளராக திரு சுப்பிரமணியம் சுதாகரனும் பொருளாளராக திரு. கணபதிப்பிள்ளை சிவகுமாரும் பொறுப்பேற்றக்கொண்டனர். இக்காலப்பகுதியில் நாட்டின் அசாதாரண சூழ்நிலை இடங்கொடுக்காத நிலையின் காரணமாக அபிவிருத்திப்பணிகள் எதனையும் மேற்கொள்ளாவிட்டாலும் கோயிற் பூசைகள் ஆடி அமாவாசை விழா என்பவற்றை சிறப்பாக நடாத்தி முடித்தனர். திரு. செல்லையா வரதராஜா அவர்கள் பரிபாலனசபைத் தலைவராக இருந்த காலத்தில் அதிபர் திரு இ. பூரணசற்குணலிங்கம் செயலாளராகவும் பரராஜசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரைசிங்கம் பொருளாளராகவும் செயற்பட்டனர். இக்காலப்பகுதியில் பிள்ளையார் மண்டபம், மணிக்கூட்டு கோபுரம், வைரவர், நவக்கிரக மண்டபங்கள், ஆகியவற்றுக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அம்மன், சிவன், மூலஸ்தானம் திருத்தப்பட்டு தீர்த்தக் கிணறும் அமைக்கப்பட்டது சிறப்பிற்குரியது. கும்பாபிசேகத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் யுத்த சூழல் காரணமாக இடைநிறுத்தப்பட்டது.

தற்போதய நிர்வாக சபையின் தலைவர் திரு. க. சண்முகநாதன் செயலாளர். திரு. இ.பூரணசற்குணலிங்கம் பொருளாளர். திரு. பரராஜசிங்கம் துரைசிங்கம் அகியோரின் அயராத முயற்சியால் ஆலயத்தின் பல்வேறுபணிகளும் உரியமுறையில் முன்னெடுக்கப்பட்டு செம்மையாகவும் விரைவாகவும் நிறைவடைந்துள்ளது.

ஆலயவளர்ச்சியல் பனங்காமத்தைச் சார்ந்த உள்நாட்டு வெளிநாட்டு அன்பர்களது நிதியுதவி மற்றும் அரச நிதியுதவியுடன் அயற்கிராமங்களான நட்டாங்கண்டல், வவுனிக்குளம், கொம்புவைத்தகுளம், மூன்றுமுறிப்பு, கோயில்குஞ்சுக்குளம் மக்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது.

ஆலயத்திருப்பணிகள் இனிதே நிறைவுற்று 04.05.2014 இல் கும்பாபிசேக பெருவிழா இனிதே நடைபெறுவதற்கு. கைகூடிவந்துள்ள காலம் இது இவ்வாலயத்தை தரிசிக்கும் ஒவ்வொருவரும் கேட்கும் வரங்களை கொடுத்தருள வேண்டுமென எம்பெருமான் கைலாயநாதர் பாதாரவிந்தங்களை பணிகின்றேன்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

திரு. கணபதிப்பிள்ளை விஜயகுமார்.
பனங்காமம்.
உதவிக்கல்விப்பணிப்பாளர்
கல்விப்பணிமனை
வவுனியா வடக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சலிங்கேஸ்வர சிவகாமி சமேத கயிலைநாதர் சிவாலய பரிபாலனசபை உறுப்பினர் விபரம் 1965 இல் இருந்து இன்று வரை

01) தலைவர்- திரு. செல்லையா கணபதிப்பிள்ளை
செயலாளர் – திரு கந்தையா பரமநாதன்

02) தலைவர்- திரு.க. கிருஸ்ணபிள்ளை (R.D.O)
செயலாளர் – திரு க.சண்முகநாதன்
பொருளாளர்- திரு. பரராஜசிங்கம் குலசிங்கம்

03) தலைவர்- திரு. க. தர்மகுலசிங்கம்
செயலாளர் – திரு சுப்பிரமணியம் சுதாகரன்
பொருளாளர்- திரு. கணபதிப்பிள்ளை சிவகுமார்

04) தலைவர்- திரு. செல்லையா வரதராஜா
செயலாளர் – திரு இ .பூரணசற்குணலிங்கம்
பொருளாளர்- திரு. பரராஜசிங்கம் துரைசிங்கம்

## தற்போதய ஆலய பரிபாலனசபை.

| | |
|---|---|
| 01.தலைவர் | : திரு. கணபதிப்பிள்ளை சண்முகநாதன் |
| 02.செயலாளர் | : திரு. இ. பூரணசற்குணலிங்கம். |
| 03.பொருளாளர் | : திரு. பரராஜசிங்கம் துரைசிங்கம். |
| 04.உப தலைவர் | : திரு. கா. திருநாவுக்கரசு. |
| 05.உப செயலாளர் | : திரு. சி. சிறிசுகந்தன். |
| 06.நிர்வாகசபை உறுப்பினர் | : திரு. முருகேசு சந்திரபோஸ். |
| 07.நிர்வாகசபை உறுப்பினர் | : திரு. பரராஜசிங்கம் சிவலிங்கம். |
| 08.நிர்வாகசபை உறுப்பினர் | : திருமதி. திருமாறன் கீதா. |
| 09.நிர்வாகசபை உறுப்பினர் | : திரு. இ. அருளானந்தம். |
| 10.நிர்வாகசபை உறுப்பினர் | : திரு. பரராஜசிங்கம் இராஜசிங்கம். |
| 11.நிர்வாகசபை உறுப்பினர் | : திரு. தா. கருணாகரன். |
| 12.காப்பாளர் | : திரு. செல்லையா சுப்பிரமணியம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாக்கப்பட வேண்டிய பாணன் கமமும், பஞ்சலிங்கேஸ்வரர் ஆலயமும்

திரு. ஜெகமூர்த்தி வேந்தன்

இயற்கை வளம் கொழிக்கும் வன்னிவள நாட்டின் முல்லை தீவு மாவட்டத்திற்குட்பட்டதும் .வவுனியா ,மன்னார்,முல்லைதீவு ஆகிய மூன்று மாவட்டங்களையும் இணைக்கும் மத்தியில் அமைந்துள்ளது பனங்காமம் என்றழைக்கப்படும் பாணன்கமம். திருமூலரால் சிவ பூமி என்றழைக்கப்பட்டதும் தொண்மை வாய்ந்த ஈழத்துச்சிவாலயங்களுடன் தொடர்பு பட்டதும் இயற்கை வளங்கள் நிறைந்ததும் வயல் சார்ந்த மருதநிலத்தை உடையதும் அருகே அழகிய பறங்கியாற்றையும் கொண்டு


தீர்த்தக்கரையாக விளங்கும் பறங்கியாறு

செழிப்பாக விளங்கும் இடத்தில் எழுந்தருளியுள்ளார் சிவகாமி சமேத கயிலை நாதப்பெருமான். இவ் ஆலயமானது பல்வேறு வரலாற்றுச் சிறப்புக்களையும், தொண்மையையும் தன்னகத்தே கொண்டுள்ளது என்றால் மிகையாகாது அவ்வகையில் இலங்கையின் பாரம்பரிய சொத்துக்கள் என்று எமது எதிர்கால சந்ததிக்கு காட்டக் கூடிய புராதன சொத்துக்களாகக் காணப்படுபவை இன்று விரல் விட்டு எண்ணு மளவிற்கு மிகக் குறைந்து சென்ற வண்ணமுள்ளது.

இலங்கையிலே இடம்பெற்று வருகின்ற இனங்களுக்கிடையேயான போட்டித்தன்மையும் இனத்துவப் பரம்பலும் இதற்கான முக்கிய காரணமாக அமைந்துள்ளது **"தக்கண பிழைக்கும் தகாதன மடியும்"** என்னும் விதிக்கேற்ப தற்போதய எமது நாட்டில் இனத்துவ ரீதியான நிலை நிறுத்தலும் காணப்படுகின்றது. பெரும்பான்மையான மூன்று இனங்களே உள்ள எமது நாட்டில் இந்துக்களான நாம் எமது பாரம்பரிய புராதன சொத்துக்களைப் பேணிப்பாதுகாக்க வேண்டியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்களாகப்பிறந்த எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். அதனைவிடுத்து வெறுமனே எமது பிரதேசங்களுடைய, தாய்நாட்டினுடைய தொண்மையை அழித்துவிடாமல் , எம் இனத்தின் பெருமையை வேற்றினத்திற்கு தாரை வார்த்துக் கொடுக்காமல் அவற்றை வெளிக் கொணர அனைவரும் முன்வர வேண்டும அவ்வகையில்

இவ்வாலயத்தின் ஆரம்பகால செயற்பாடுகளை நோக்குவது பொருத்தமாக அமைந்துள்ளது. ஆரம்பகாலத்தில் சின்னவியார் என அழைக்கப்படும் சுப்பிரமணியம் வீரேசு என்னவர் காட்டுக்கு தேன் எடுக்கச் சென்ற போது இந்த ஆலயம் மேடாக காணப்பட்டது என்றும் இவ்வாலயத்தை அமைப்பதற்காக செல்லப்பாசுவாமி அவர்கள் இரண்டு வருடம் இங்கு தங்கியிருந்தார் என்றும் , இவ்வாலயத்துக்கு சின்னாச்சி (சின்ன நாச்சி) என்பவருடைய பணியும் அளப்பெரிது என கிராம முன்னோர்கள் கூறுகின்றனர்.

அந்தவகையிலே பல பெறுமதிசேர் சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு பல மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்டு இன்று வரை அதனை வெளிப்படுத்தப் படாமல் இருக்கும் இந்துக்களின் பொக்கிசங்களில் ஒன்றே இப்**"பனங்காமம் பஞ்சலிங்கேஸ்வரர்"** ஆலயமாகும்.

இலங்கையில் உள்ள அனைத்து சிவன் ஆலயங்களையும் விட தனக்கென்று ஒருசிறப்பான அம்சமாக ஐந்து இலிங்கங்களை இவ் ஆலயம் தன்னகத்தே கொண்டுள்ளதே இவ்வாலயத்தின் சிறப்புக்களில் ஒன்றாகும் **இத்தகைய சிறப்பு வாய்ந்த ஆலயமானது இலங்கையின் வட மாகாணத்திலே மாந்தை கிழக்கு, நட்டாகண்டல் பாணன்கமம் என்ற இடத்திலேயே அமைந்துள்ளது. .பாணன்கமம் என்ற பெயர் மருவி தற்போது இவ்விடம் பனங்காமம் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது.**

இலங்கையிலே சிவ வழிபாட்டின் முன்னோடியாக இருந்தவர் இராவணேஸ்வரன். இவருடைய காலத்திலே இலங்காபுரம் இராஜதானி அமைந்திருந்த மாந்தை , பாலாவி மாதோட்டம் திருக்கேதீச்சரம் மற்றும் அதனை ஒட்டிய பல இடங்களிலே இருந்துள்ளது. அவற்றில் ஒன்றான பஞ்சலிங்கக் கோயிலான இப் பாணன் கமம் கயிலைநாதர் சிவ ஆலயமும் புராதன வரலாற்றைக் கொண்டதாகும்.

இந்த சிறப்பு வாய்ந்த ஆலயம் உள்ள இடத்திற்கு பாணன் கமம் என்ற பெயர் எதனால் ஏற்பட்டது என்றால்.இக்காலத்திலே இராவணேஸ்வரனின் தம்பி பரம்பரையினர் இலங்கை இராஜதானியில் ஆட்சி செய்த காலத்தில் இந்தியாவில் இருந்து வந்த பாணன் குலத்தை சேர்ந்த அந்தகன் ஒருவன் அரசன் முன்னிலையிலே யாழ் வாசித்து பரிசல் பெற்றான் அவனுக்குப்பரிசாக அரசன் பெரிய கமம் ஒன்றை பரிசாக வழங்கினான். பாணனுக்கு பரிசிலாகக் கிடைத்த கமம் என்ற இடமே பாணன் கமம் என்றும் இதுவே மருவி தற்போது பனங்காமம் என்று அழைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த பனங்காமத்திலே உள்ள பஞ்சலிங்கேஸ்வரா் ஆலயத்திலே இருந்த 5 இலிங்கங்களுள் இரண்டு இலிங்கங்கள் காணாமல் போயுள்ளன தற்போது 3 **இலிங்கங்களே எஞ்சியுள்ளன**.இவ்வாறு எஞ்சியுள்ள மூன்று இலிங்கங்களும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறப்புக்களைக் கொண்டுள்ளது. இங்கு மூலஸ்தானத்திலே இருக்கும் இலிங்கம் நிலத்திற்கு மேல் 4அடி உயரமுடையது.



மூலஸ்த்தன இலிங்கம்

ஏனைய இரண்டு இலிங்கங்களில் ஒன்று வெள்ளைக்கல்லிலும் மற்றயது கறுத்த நிற கருங்கல்லிலும் பொழியப்பட்டுள்ளன இவை நிலத்திற்கு மேல் சுமாா் 2. ½ அடி உயரமாவை ஆகும்.



கருப்பு, வெள்ளை, இலிங்கங்கள்

இவ்வாறு பஞ்சலிங்கங்களை கொண்டதும் ஒரு புராதன வரலாற்றை கொண்டதுமான இவ் ஆலயம் தொடர்பாக இலங்கையின் தொல்லியல் ஆய்வாளரும் யாழ்பல்கலைக்கழக தொல்லியல் துறை சிரேஸ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் செ.கிருஸ்ணராஜா அவர்களிடம் இவ் இலிங்கங்களின் புகைப்படங்களை காண்பித்தபோது இவ் இலிங்கங்கள் அனைத்தும் சோழர் காலத்திற்குரியதாகவே இருக்க வேண்டும் இவ் இலிங்கங்களுள் உள்ள குறியீடுகள்,வடிவங்கள் சோழர் காலத்திற்குரியனவே அத்துடன் திருக்கேதீச்சரத்திலுள்ள இலிங்கமும் இதனைப் போன்றே அமைந்துள்ளது. எனவே திருக்கேதீச்சரத்திற்கும் இவ்வாலயத்திற்கும் தொடர்புகள் இருக்க அதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. எனவே இது தொடர்பாக நாம் முறையான ஆய்வொன்றை களத்தில் மேற்கொண்டால் இது தொடர்பான உண்மை நிலையை அறிய முடியும். அது மட்டுமன்றி இது ஒரு மிகப்புராதன தொல்லியல் சொத்து இதனை கவனமாக பேணிப்பாதுகாக்க வேண்டும். எனக்குறிப்பிட்டார்.

பேராசியர் அவர்கள் குறிப்பிட்டது போன்று இவ்வாலயத்தில் மட்டுமன்றி ஆலயச் சூழல் மற்றும் இக் கிராமத்தின் பல பகுதிகளிலும் பல பண்டைய பொருட்கள் , உருவங்கள் , சிதைவுகள் போன்ற காணப்படுகின்ற இதனை குறித்த பிரதேசங்கள் மக்கள் தமது காணிகளில் பாதுகாத்து வருவதுடன் ஆய்வுகள் மேற்கொள்பவருக்கு அதனை ஒப்படைக்க உள்ளதாகவும் தெரிவித்தனர். எனினும் ஆய்வுகளை மேற்கொண்டாலும் இப்பொருட்களை தொல்லியல் கூடங்களுக்கு தற்போதைய நாட்டு நிலமையின்படி எடுத்து செல்வது என்பதும் ஒருசிக்கலான விடயமாகவே உள்ளது. தமிழர், இந்துக்களின் பாரம்பரியம் சார்ந்த விடயங்கள் அழிக்கப்படுவதே இதற்கு காரணமாகும். இதனால் இப்பொருட்களை பாதுகாக்க இடமாற்றம் செய்வதென்பது முடியாத ஒன்றாகவே உள்ளது.

நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக இவ்வாலயம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள முடியாமல் போனதும் ஒரு காரணமாக இருப்பினும் தற்காலத்தில் அதனை மேற்கொள்ள வேண்டிய கட்டாய தேவைப்பாடு ஒன்றும் உள்ளது. ஏனெனில் இது தமிழ்மக்களின், இந்துக்களின் தொன்மையையும் பாரம்பரியத்தையும் வெளிக்கொண்டுவர உதவும் ஒரு படியாக அமையும்.

இவ்வாறு பல சிறப்புக்கள் கொண்ட இப்பழம் பெரும் ஆலயத்திற்கு 2003ம் ஆண்டு கும்பாபிசேகம் செய்வதற்காக மூலஸ்தானம் மூடப்பட்டு வெளியே கறுப்பு வெள்ளை இலிங்கங்கள் பாலஸ்தானம் செய்யப்பட்டன



எனினும் மக்கள் இடப்பெயர்வினால் இதுவரை கும்பாபிசேகம் செய்து முடிக்கப்படவில்லை. தற்போது குறைந்தளவு மக்களே மீளக்குடியேறி உள்ள நிலையில் கும்பாபிசேகத்தை மேற்கொள்ள பரிபாலன சபையினரிடம் நிதி வசதி இல்லை என்றாலும் அதனை மக்களிடம் இருந்து உதவி பெற்று செய்து முடிக்க திட்டமிட்டுள்ளனர்.

இலங்கைத் தமிழர்களின் மற்றொரு இராஜதானியில் அமைந்த இச் சிவாலயத்தை புனருத்தாரணம் செய்து பாதுகாப்பது பொறுப்புள்ள சிவபத்தர்களாகிய் எம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிசேக குருமார் விபரம்

சிவஸ்ரீ. ராம ஸ்ரீரங்கக்குருக்கள்
(பிரதமகுரு. காளிகோயில்,
கொடிகாமம்)

சர்வாபோதகாசிரியர் கிரியாகலாமணி
சிவஸ்ரீ.செ.விமலராஜக்குருக்கள்
(ஆலயபிரதமகுரு) வவுனிக்குளம்
சிவபுரம் சிவாலயம், பாண்டியன்குளம்

- பிரதம குருக்கள் சிவாகம கிரியா திலகம் சிவாகம ரத்தினம்
- ஏனைய குருமார் சிவஸ்ரீ.ஜேக்குமார் குருக்கள்
(திருவையாறு 3ம் பகுதி விநாயகர் ஆலயம பிரதமகுரு)
- சிவாகம கிரியாதிலகம் சிவஸ்ரீ.வை.கு.ஜேசுதக்குருக்கள்
(நெடுங்கேணி கதிர்வேலாயுத சுவாமிகோயில் பிரதமகுரு)
- கிரியா பூஷணம் சிவஸ்ரீ. பு.பாசாங்குசக்குருக்கள்
அரசடி பிள்ளையார், ஆதினகர்த்தா, கோண்டாவில் கிழக்கு)
- சாஸ்த்திரயோகி காளத்தி சிவாச்சாரியார்
சிவஸ்ரீ. சிவகுமார் குருக்கள் (கொழும்பு)
- ஜாகசம்ரட்சகர்கள்
சிவஸ்ரீ.ச. சிவநேசன் ஐயா
சிவஸ்ரீ. இ. சிவகுமார ஐயா (கொழும்பு)
- சிவஸ்ரீ. கு. கதிர்காமநாதன் ஐயா (கொழும்பு)
- சிவஸ்ரீ. ஜேசங்கர் ஐயா (கொழும்பு)
- சிவஸ்ரீ. கணேஸ்வரன் ஐயா (கொழும்பு)
- சிவஸ்ரீ. நளின் ஐயா (கொழும்பு)
சித்தி விநாயகர் அலயம் கூழாவடி ஆதி விநாயகர் ஆலயம்.
- சர்வசாதகம் சிவஸ்ரீ. ரவீந்திரக்குருக்கள் (அச்சுவேலி)
சிவஸ்ரீ. ப. சிவரூபன் ஐயா(லட்சுமணன் தோட்டம் விநாயகா
ஆலயம் (பருத்தித்துறை)
சாதகபூஷணம் சாதக கலாமணி சிவஸ்ரீகணேசகிஷ்ணகுமார்
ஐயா. (கொழும்பு) பாதசாதகர்
சிவஸ்ரீ. துங்கராசா ஐயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிற்பாசாரி**
திரு.சொக்கலிங்கம் பாலச்சந்திரன்
கோவில்புதுக்குளம்.

**கட்டடக் கலைஞர்.**
திரு.இ.பாலகிருஸ்ணன்.
வட்டுக்கோட்டை.

**வர்ணஅமைப்பாளர்.**
திரு.S.சுதன். மூன்றுமுறிப்பு
திரு.க.உதயகுமார் . மூன்றுமுறிப்பு

**மங்கள வாத்தியம்**
ஜெகதீஸ்வரன் குழுவினர் சாந்த சோலை வவுனியா.

**சொற்பொழிவு**
சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன்(ஆசிரிய ஆலோசகர்M.A)
சைவப்புலவர் நித்தியதசிதரன் (M.A)

**பஞ்சலிங்கேஸ்வர சிவகாமி அம்பிகா சமேத கயிலைநாதர் சிவாலயத்தை புனருத்தாரணம் செய்வதற்கு நிதி உதவி வழங்கிய அன்பர்கள்.**

01. சிவன் மூலஸ்தானம்,கலசம் உபயம். – கவித்திரா சிவகுமார் (கனடா)
02. அம்மன் மூலஸ்தானம்,கலசம் உபயம். – நர்மதா தேவராசா. தாண்டிக்குளம்.
03. வைரவர் மூலஸ்தானம்,கலசம் உபயம். – தர்மகுலசிங்கம் சுகந்தி. பனங்காமம்.
04. சிவன் மூலஸ்தானக் கதவு உபயம். – மு.பாஸ்கரன் குடும்பம். ஜேர்மன்.
05. வைரவர் கதவு உபயம் - வே.கனகசபை. நட்டாங்கண்டல்.
06. பிள்ளையார் மண்டபம் உபயம் - க.பரமநாதன் குடும்பம். பாலிநகர் வவுனிக்குளம்.
07. முருகன் மண்டபம் உபயம் - முருகேசு மகேஸ்வரி குடும்பம். பனங்காமம்.
08. மணிக்கோபுரம் உபயம் - குலசேகரம் நவசீலன் குடும்பம். ஜேர்மன் .
09. முன்மண்டபம் உபயம் - குலசேகரம் குணசீலன் குடும்பம். கனடா.
10. சண்டேஸ்வரர் உபயம் - சுப்பிரமணியம் பிரபாகரன் குடும்பம். பிரான்ஸ்
11. வாசல் சுவர் (Gate) - சுப்பரமணியம் சுதாகரன் குடும்பம். லண்டன்.
12. மடப்பள்ளி (களஞ்சிய அறை) வீரேசு தங்கராசா குடும்பம். பனங்காமம்.
13. மூலஸ்தானக்கதவு – முருகேஸ்சு பாஸ்கரன். ஜேர்மன்.
14. பலிபீடம். - இ. பூரணநற்குணலிங்கம் கோப்பாய்.
15. வைரவர் சிலை – நடராசா செல்வராசா. கோவில்குஞ்சுக்குளம்
16. அம்மன் சிலை – கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணவேனு. வடகாடு
17. நவக்கிரகமண்டபம் திருத்த வேலை - ரூபி செல்வகுமார் சுவிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டலாபிசேக உபயகாரர்கள்

04.05.2014 ஞாயிற்றுக்கிழமை சிவஸ்ரீ. சே.விமலராஜக்குருக்கள் குடும்பம்
05.05.2014 திங்கட்கிழமை கணபதிப்பிள்ளை சிவகுமார் குடும்பம் (ஜேர்மனி)
06.05.2014 செவ்வாய்க்கிழமை நா.ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நட்டாங்கண்டல் மக்கள்
07.05.2014 புதன் கிழமை தா.கருணாகரன் தலைமையில் பனங்காமம் மக்கள்
08.05.2014 வியாழக்கிழமை திரு.பரராசசிங்கம் குடும்பம் (பனங்காமம்)
09.05.2014 வெள்ளிக்கழமை சி.செந்தூரன் குடும்பம் (பாண்டியன குடும்பம்)
10.05.2014 சனிக்கிழமை க.ஜெயராசலிங்கம் குடும்பம் (கனடா)
11.05.2014 ஞாயிற்றுக்கிழமை குலசேகரம் குணசீலன் குடும்பம் (கனடா)
12.05.2014 திங்கட்கிழமை திரு சிங்கார வேலன் குடும்பம் (கனடா)
13.05.2014 செவ்வாய்க்கிழமை குலசேகரம் நவசீலன் குடும்பம் (ஜேர்மனி)
14.05.2014 புதன்கிழமை முருகேசு சந்திரபோஸ் குடும்பம் (பனங்காமம்)
14.05.2014 புதன்கிழமை தர்மேந்திரா ராஜி குடும்பம் (ஜேர்மனி)
15.05.2014 வியாழக்கிழமை பிரதேச செயலகம் மாந்தை கிழக்கு
15.05.2014 வெள்ளிக்கிழமை செல்லையா பூலோகசிங்கம் பிரதீபன் குடும்பம் (பிரான்ஸ்)
17.05.2014 சனிக்கிழமை கந்தையா பரமநாதன் குடும்பம் (பாலிநகர்)
18.05.2014 ஞாயிற்றுக்கிழமை தி. இடபரூபன்
18.05.2014 ஞாயிற்றுக்கிழமை தி. தர்மலிங்கம் (பிள்ளையார் ஸ்தாபனம் மல்லாவி
18.05.2014 ஞாயிற்றுக்கிழமை தி. சோதிலிங்கம
19.05.2014 திங்கட்கிழமை திரு. உதயகுமார் றஜனி குடும்பம் (சுவீஸ்)
20.05.2014 செவ்வாய்க்கிழமை திரு. செல்வகுமார் ரூபி குடும்பம் (சுவீஸ்)
21.05.2014 புதன்கிழமை கணபதிப்பிள்ளை கஜேந்திரகுமார குடும்பம் (லண்டன்)
22.05.2014 வியாழக்கிழமை கணபதிப்பிள்ளை குடும்பம் (பனங்காமம்)
23.05.2014 வெள்ளிக்கிழமை முருகேசு தேவராசா குடும்பம் (பனங்காமம்)
24.05.2014 சனிக்கிழமை பொ. பரஞ்சோதி குடும்பம் (அவுஸ்ரேலியா)
24.05.2014 சனிக்கிழமை மூ. பொன்னுத்துரை குடும்பம் (வன்னிவிழாங்குளம்)
24.05.2014 சனிக்கிழமை க. சண்முகநாதன் குடும்பம் (பனங்காமம்)
25.05.2014 ஞாயிற்றுக்கிழமை R.D.O கிருஸ்ணபிள்ளை குடும்பம்(பரணி ஹாட்வெயர்)
26.05.2014 திங்கட்கிழமை செல்லையா வரதராசா, தவராசா குடும்பம் (வசந்தன் ஜேர்மனி)
27.05.2014 செவ்வாய்க்கிழமை முருகேசு பாஸ்கரன் குடும்பம் (ஜேர்மனி) (மண்டலாபிஷேக நிறைவு சங்காபிஷேகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலராசிரியரின் இதயத்தில் இருந்து....

நாவெல்லாம் நமசிவாய சொல்ல வேண்டும்
ஊரெல்லாம் நமசிவாய சொல்ல வேண்டும்
பனங்காமமும் சிவாயநம சொல்ல வேண்டும்

வந்தாரை வாழவைக்கும் வன்னி வள நாட்டின் இயற்கை எளில் கொஞ்சும் முல்லை மண்ணில் வளம் பெற்ற பழம்பெரும் கிராமமே பனங்காமம் ஆகும். இப்பதிதனில் அமைந்துள்ள சிவகாமி அம்பிகா சமேத கைலாய நாதர் ஆலய மஹா கும்பாபிஷேக நிகழ்வினை ஒரு மலராக தொகுப்பதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு எல்லாம் வல்ல எம் கைலாய நாதப் பெருமானின் பாதார விந்தங்களை பணிகின்றேன்

தொன்மை சிறப்பு வாய்ந்த இவ்வாலயத்தை அன்றில் இருந்து இன்று வரை பேணி காத்துவரும் சிவனடியார்கள் யாவர்க்கும் எனது முதற்கண் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆலயகட்டட நிர்மான பணிகளை ஆரம்பித்து தொடர்ந்தும் முயற்சிகளை முழுமனதோடு மேற்கொண்ட கடந்தகால நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

தற்போது தலைவராக இருக்கும் திரு.க.சண்முநாதன் (முன்னாள் கிராமசேவையாளர்) அவர்களின் அயராத உழைப்பும் தளராத முயற்சியினாலும் முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த திருப்பணி வேலைகள் யாவும் நிறைவுற்று எம்பெருமானுக்கு கும்பாபிசேகம் நடைபெற திருவருள் கூடியிருப்பது இவர் காலத்தில் என்பதும் எடுத்துரைக்கத்தக்கதாகும்.

அத்தோடு அயல்கிராமங்களான நட்டாங்கண்டல், பாண்டியன்குளம், வவுனிக்குளம், கரும்புளியான், கொம்புவைத்தகுளம், மூன்றுமுறிப்பு, கோயில்குஞ்சுக்குளம் வாழ்மக்களின் அளப்பெரிய உதவிகள் இவ்வாலய வளர்ச்சிக்கு மேலும் மேருகூட்டியதை நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

யுத்தம் நடைபெற்ற 2000 - 2002 காலப்பகுதிகளில் எம்பெருமானுக்கான ஆலய பூசைகளையும், மற்றும் பராமரிப்பு பணிகளையும் செல்லையா பரராஜசிங்கம் என்பவரின் மருமகன் திரு. இ. பாலகிருஷ்ணன் மேற்கொண்டது என்றுமே போற்றுவதற்கு உரியதாகும்.

கைலைநாதரின் கும்பாபிசேக மலரிற்க்கு ஆசியுரை, அருளுரை வழங்கிய அந்தணப் பெருமக்களுக்கும் வாழ்த்து செய்தியும் ஆசிசெய்தியும் வழங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய ஆலய அறங்காவலர் சபையினருக்கும் இம்மலருக்கு நாம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தங்கள் வேலை பழுமத்தியிலும் வாஞ்ஞையுடன் செய்திகளை உவந்தளித்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிவசக்தி ஆனந்தன் மற்றும் வடக்கு மாகாண சுகாதர அமைச்சர் கௌரவ பா.சத்தியலிங்கம், முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. நா. வேதநாயகன், வடமாகாண அமைச்சு செயலாளர் திரு. சி.திருவாகரன் அவர்கட்கும் எம் நெஞ்சம் நிறைந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்தோடு இவ்வாலய கும்பாபிஷேக நிகழ்விற்கு பொருளுதவி, நிதியுதவி வழங்கியும், வாழ்த்து செய்தியும் வழங்கிய பாண்டியங்குளம் பிரதேச செயலாளர் (மாந்தை கிழக்கு) திரு.T. பிருந்தாகரன் அவர்களுக்கும் ஆலய பரிபாலனர் சபையின் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பனங்காம பதியில் வீற்றிருக்கும் கைலாய நாதர் பெருமான் ஆலயத்தினை தம் கைவண்ணத்தால் அழகுற அமைத்து தந்த கட்டிட கலைஞர்கள். சிற்பாசாரிகள், ஓவிய கலைஞர்கள், வாத்திய கலைஞர்கள், சொற்பொழிவாளர்கள், பல உதவிகளை நல்கிய மாந்தை பிரதேச சபையினர்க்கும், எம் பரிபாலன சபை சார்பாகவும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு. இவ்வாலயத்தை அமைப்பதற்கு நிதியுதவி, பொருளுதவி வழங்கிய உள்நாட்டு, வெளிநாட்டு நண்பர்களுக்கும் சரீர உதவிகளை வழங்கியவர்களுக்கும் எம் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

கும்பாபிசேக நிகழ்வுகளையும் அதனைத்தொடர்ந்து மண்டலாபிசேக நிகழ்வுகளையும் நடாத்தும் பிரதம குரு சிவ சிவஸ்ரீ இராம ஸ்ரீரங்கக்குருக்கள் ஐயா அவர்களுக்கும் ஆலய பிரதமகுருவிற்கும் ஏனைய சிவாச்சாரியர்கள் மற்றும் குருமாறுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

எங்களுடைய ஆலயத்தினுடைய திவூஞ்சல் பாமாலையை இயற்றிய திரு. சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன் அவர்கட்கும், இக்கும்பாபிஷேக மலருக்கு சகல வழிகளிலும் ஆலோசனையும் ஊக்கமும் வழங்கிய திரு. அரியரட்ணம் அமலேஸ்வரன் வவுனியா வடக்கு கல்விப் பணிமனை, இந்த ஆலய வரலாறுகளை பத்திரிகையில் பிரசுரித்த ஊடகவியலாளர் திரு.ஜெ.வேந்தன் ஆகிய இருவருக்கும் மனமார்ந்த நன்றிகள்

இந்நூலை தட்டச்சு செய்து தந்த திருமதி. விவேகானந்தராசா சிவமதி அவர்கட்கும் இம்மலரினை சிறப்புற வடிவமைத்து குறித்த நேரத்தில் நூல் உருவாகத்தந்த சுபாஸ் அச்சகத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இதழாசிரியர்.
திரு.கணபதிப்பிள்ளை விஜயகுமார்.
(உதவிக்கல்விப்பணிப்பாளர் கல்விப்பணிமனை
வவுனியா வடக்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனங்காமம் கயிலைநாதர் சிவாலயம் (பஞ்சலிங்கேஸ்வரர் கோவில்) மேற்பாடப்பட்ட திருவூஞ்சற் பா

காப்பு

சீர்மேவும் ஈழவள நாட்டின் மேவுபுகழ்
சிறப்பார்ந்த முல்லைமண் மேற்கின் பால்
பார்மேவு சைவ மக்கள் வாழவேண்டிப்
பகரு மொரு பனங்காமம் பதியிற்சேரும்
நீர்மேவும் பறங்கியாறும் நிலமேவும் பாணன்கமமும்
விரும்பி வீற்றிருக்கும் கருணை வள்ளல்
பேர்மேவு நந்தி யினிது பாடக்
கார் பெரு சிவன் கயிலைநாதர் தாள் காப்பதாமே.

01

நல்லொளிசேர் நவமணிகள் தூண்களாக
நவையிலா வைரமதால் விட்டம் பூட்டி
ஊரிலான் பேரிலான் ஒன்றுமிலான்
எல்லாமா யிருக்கின்ற தன்மை காட்டிச்
சீரோங்கு சிற்றம்பலத்தே நடனமாடிச்
சித்தத்துள்ளே சிவமாய் நின்று
மெய்திகழ் பனங்காமம் மீதிருந்து
உய்விக்கும் சிவன் கயிலைநாதரே யாடீரூஞ்சல்.

02

பானல்வாய் மலர்ந்தமுத பாலகனுக்குப்
பாலமுத மூட்டியுயர் ஞானங்காட்டிச்
சீலமொடு சிவயோக நெறியுங் காட்டுஞ்
சிவகாமியம்மையோடு யாடீரூஞ்சல்
சுந்தர நற்சொல்லுடைய தமிழ் வேதங்கள்
தெரிவையர்கள் பண்ணிசையிற் சேர்ந்து பாடக்
கொத்தலர்ந்த சோலை புகழ் பனங்காமமூரில்
சேண்புகழ் சிவன் கயிலைநாதரே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03

தண்ணிலவு களனிகள் சேர் பசுக் கூட்டங்கள்
தகைமை பெறு குளக்கட்டைச் சார்ந்து நின்று
விண்ணிலவு மரங்களுயர் வீதி யோடு
விளங்கு பல உழவர்கள் காராளர்கள்
மண்ணிலவு மரசாங்க வூழியர்கள்
வதியுமொரு பனங்காமம் மிடமாகக் கொண்டு
நல்நிலவு நிலஞ் சார் பஞ்சலிங்கேஸ்வரர்
களிதரும் சிவன் கயிலைநாதரே யாடீரூஞ்சல்.

04

எண்ணிய அடங்காப் பற்றுப் போர் முகட்டின் மீது
எழுதியதோர் பஞ்சலிங்கரே யாடீரூஞ்சல்
தண்ணரிய தாபதங்கள் தம்மையுன்னி
வழுத்த வருள் செய்பவரே யாடீரூஞ்சல்
பண்ணரிய காரியங்கள் தொடங்கும் போதும்
நினைக்கவருள் செய்பவரே ஆடீரூஞ்சல்
கண்ணரிய பனங்காமம் மக்கள் மீது
கருணைபுரி சிவன் கயிலைநாதரே ஆடீரூஞ்சல்.

05

சிவகாமியுடன் சேர்ந்துறைபவரே யாடீரூஞ்சல்
சீர்த்தூயமாமணிச் சுடரே யாடீரூஞ்சல்
சங்கமயர் வித்த தமிழ் வல்லுனர்கள்
தமை வணங்க வைத்தவரே யாடீரூஞ்சல்
திங்களணி சடைப் பெருமான் எண்டிசை தொறும்
திகழ்ந்து அடியவரின் அச்சமறுத்தவரே யாடீரூஞ்சல்
மங்கல நன் வனிதையர் வார் பனங்காமம்
பஞ்சலிங்கக் கயிலைநாதரே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06

விண்ணோங்கு மருதடர்ந்த வாவியோர் பால்
விளங்கு பாணன்கமம் இடமாகக் கொண்டு
மண்ணோங்கு உழுமுழவர் வாணிபர்கள்
வளமருள வீற்றிருக்கும் கருணை வள்ளல்
தண்ணோர்க்கு மலர்மாலை மணிப்பூணாரம்
தளங்கு திருமேனியரே யாடீரூஞ்சல்
பண்ணோர்க்கு பாவலர்கள் பனங்காமம்
பரவுகின்ற பஞ்சலிங்கக் கயிலைநாதரே யாடீரூஞ்சல்.

07

திருமகளும் கலைமகளும் வடந்தொட்டாட்ட
நிலமகள் முன்நின்று கவரி வீச யாடீரூஞ்சல்
கருமேகக் கண்ணணோடு வருணன் வாயு
கணநாதர் இந்திரன் கையெடுத்து நிற்க யாடீரூஞ்சல்
அருள்மேவும் அரமகளிர் பரதமாட
ஆதிசேடனு மருகே அமர்ந்து நோக்க யாடீரூஞ்சல்
திருமேவும் பரமனென நினைத்துன்னைப் பரவுகின்ற
பஞ்சலிங்கக் கயிலைநாதரே யாடீரூஞ்சல்.

08

விரித்த செஞ்சடையாட விளங்கு மார்பில்
வெண்டரள மாலை முப்புரி நூலாட
தரித்த நதி மதியாடத் தவள மேனி
தாங்கிய கங்கணமாடக் கலிங்கமாட
வெறித்தபுலி யதளாடக் குண்டலமுமாட
விளங்குமண்ட சராசரங்க ளனைத்துமாட
நரிக்குலங்கள் பரிக்குலங்களாக்க வல்ல
பனங்காமம் கயிலைநாதரே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09

நக்கீரரின் நனிகர்வம் நீக்க வேண்டி
நவில் நெற்றிக் கண் காட்டி நடுங்க வைத்து
நற்றுணைய ஐந்தெழுத்தின் பொருளைச் சொல்லி
நல்வினையோடு விளங்க ஐந்தொழில் கொண்டோனே
உருத்திரத் தாண்டவத் தோடு வந்து நின்று
வணங்குபவர் துயர் தீர்க்கும் சிவனே நின்
பாதமலர் வழுத்துவோர் வாழ பனங்காமத்தில்
காதல்புரி சிவனார் கயிலைநாதரே யாடீரூஞ்சல்.

10

மாதமொரு மும்மழை பொழிந்து வாழி
மலிவளமும் செங்கோலும் மகிழ்ந்து வாழி
பூசகர் அந்தணர் அறமும் பொலிந்து வாழி
புகழ் வாழி நலம் வாழி புவியும் வாழி
தேக புகழாலயத்தின் பக்தரோடு
திகழ் பரிபாலரும் சிறந்து வாழி
வீசுபுகழ் பனங்காமந் தனிலே அரவத்தோடு
கார் சிறக்க சிவனார் கயிலைநாதரும் வாழ்க வாழி

11

எவ்வுயிர்க்கும் தானாகி நின்றாய் வாழி வாழி
ஏதங்களறுத்து எமை யாள்வாய் வாழி வாழி
அல்லலறுத் தெமையாள்வாய் வாழி வாழி
ஐந்தொழிலுக் கதிபதியே வாழி வாழி
ஒளிக்குள் ஒளியாகி நின்றாய் வாழி வாழி
ஓங்காரத் தத்துவமே வாழி வாழி
பனங்காமப் பஞ்சலிங்கேஸ்வரரே வாழி வாழி
பாகமாய் புணர்ந்த சிவகாமியம்மையோடு வாழி வாழி!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கை

முன்நாட் புரமெரித்த சிவனார் பஞ்சலிங்கேஸ்வரரே எச்சரிக்கை
முக்கண்ணோடு வாழ்த்திவரு முதல்வா எச்சரிக்கை
ஓன்றாகியும் பலவாகியும் நின்றாய் சிவனே எச்சரிக்கை
ஐங்கரனும் ஆறுமுகனும் ஆவாய் எச்சரிக்கை
தேனினிய தமிழோங்க முன் வந்தாய் எச்சரிக்கை
தேவர்க்கருள் செய்து வினை களைந்தாய் எச்சரிக்கை
பஞ்சமில்லா பனங்காமம் வதிபதியே எச்சரிக்கை
பரிந்தருவம்புரி சிவனார் கயிலைநாதரே எச்சரிக்கை.

## பராக்கு

அருள் தவழும் அம்பலத்தரசே பராக்கு
ஆகமமும் வேதமும் ஆனாய் பராக்கு
இகலோகமும் பரலோகமும் ஈவாய் பராக்கு
ஈசா பனங்காமத் தேவா பராக்கு
உலகேழொடு ஏழுமுய்ய உயிர்ப்பாய் பராக்கு
ஊனுடலுள் ஞானநட மருள்வாய் பராக்கு
பறங்கியாற்று நீரோடு வதியும் கயிலைநாதரே பராக்கு
வளர் பஞ்சலிங்கேஸ்வரரே பராக்கு.

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம் (மங்)

ஆனைமுக ஐங்கரர்க்கும் ஆறுமுகக் கந்தனுக்கும் மங்களம்
மருதமடர் பாணன்கமத்து பனங்காமக் கயிலைநாதருக்கு மங்களம் (மங்)

அம்மை சிவகாமியோடு ஆடல்புரிவார் தமக்கு
செம்மைநிறை பஞ்சலிங்கேஸ்வரருக்கு மங்களம் (மங்)

நாரணர்க்கும் நான்முகற்கும் நற்றமிழ் சொல் பாவலர்க்கும்
ஆரணங்களோதுகின்ற அந்தணர்க்கும் பூசகர்களுக்கும் (மங்)

பழனமஞ்ஞை ஊர்பதி பனங்காமம் வாழ் அடியவர்க்கும்
தேசங்கடந்து வாழ் பக்தர்களுக்கும் மங்களம்
மங்களம் நித்திய மங்களம் சுப மங்களம்

இயற்றியவர்: திரு. சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன்
முகாமையாளர்
ஆசிரிய நிலையம், புளியங்குளம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்கவியரசு
கண்மணிதாசன்







அருட்கவியரசு
கண்மணிதாசன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
சுபாஸ் அச்சகம்,